www.malankaralibrary.com

# என் ஊர் நடைக்காவு



## மரிய ஜாண் நடைக்காவு

இணையதள வெளியீடு 2021

www.malankaralibrary.com

# அணிந்துரை

*He raiseth up the poor out of the dust, and lifteth the needy out of the dunghill; (Psalm : 113:7)*

*Pastor: Apostolic Zion Church*
*Director: Zion music Academy*
*General body member: MDMK*
*Scretary Elect: Y's Men International*
*SWIR Zone I Dist III*
*Treasurer: United Christian Council*
*Nadaikkavu Zone*
*Vice President: KK Dist Minorites Fed*
*Munchirai Union*

**Theoder E. John**

5/240 A - Nadaikkavu
Chathencode Post
Kanyakumari District
Tamil nadu , S. India - 629153
e-mail : theoder_j@yahoo.com



நடைக்காவு மண்ணின் மைந்தன் அருட்தந்தை. மரிய ஜாண் அவர்கள் எனது ஆரம்ப கல்வியில் வகுப்பு தோழர். அவரது தகப்பனார் திரு. ஜார்ஜ் அவர்கள் தக்கலை தபால் நிலைய தலைமை அதிகாரியாக இருந்து ஒய்வு பெற்றவர். தாயார் நினைவில் வாழும் திருமதி.பொன்னம்மா அவர்கள் நம்மூர் பள்ளிக்கூடத்தில் ஆசிரியையாக பணியாற்றிக் கொண்டிருந்தவர்.

"என் ஊர் நடைக்காவு" என்ற இணையதள நூலை அவர் வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். மறந்து போன பல விடயங் களை இந்த நூலில் அவர் நினைவுபடுத்தியிருப்பதை வாசிக்கும் போது மீண்டும் பழைய பசுமையான நாட்கள் நெஞ்சுக்குள் ஊஞ்சல் ஆடுகிறது. நமது ஊரின் சிறப்புகள் பெருமைகள் வாழ்க்கைமுறைகள் முதலானவைகள் கால ஓட்டத்தில் அழிந்து போகாமல் வளரும் தலைமுறைகளும் அறிந்து கொள்ள இந்நூல் உதவும். மேலும் வரலாற்றின் பக்கங்களை நடைக்காவு ஊர் அலங்கரிக்க இந்த இணையதள நூல் விரைவில் வரலாற்று நூலாக வெளிவர வேண்டுமென உளமார வாழ்த்துவதோடு அருமையான பணியினை முன்னெடுத்தமைக்காக மனதார நன்றியினை பாராட்டி மகிழ்கிறேன்.

நடைக்காவு
20/02/2021

தியோடர் ஈ ஜாண்

www.malankaralibrary.com

# எனதுரை

அன்பர்களே „என் ஊர் நடைக்காவு“ என்னும் என்னும் இந்நூலை இணையதளத்தில் வெளியிடுவதில் மிகவும் மகிழ்கிறேன். 1980ஆம் ஆண்டு முதல் நடைக்காவில் நான் வாழ்ந்து அனுபவித்த நிகழ்வுகளை தொகுத்து இந்நூலை அமைத்துள்ளேன்.

இது ஒரு வரலாற்று நூல் அல்ல. நடைக்காவின் பழம் பெருமைகளை கண்டறிவதே இதன் நோக்கம். இணையதளத்தில் இதனை வெளியிடுகின்ற போது உங்கள் கருத்துக்களையும் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு நான் பெற்றுக் கொள்ளும் கருத்துக்களை இணைத்து பிற்காலத்தில் இந்நூலை புத்தக வடிவில் அச்சிட்டு வெளியிட திட்டமிடுகிறேன்.

ஐரோப்பிய நாடுகளில் சிறிய கிராமமாக இருந்தாலும் அவ்வூர் மக்கள் தங்கள் கிராமத்தைச் சார்ந்த பழங்கால நினைவுச் சின்னங்களையும் பழங்கால நிகழ்வுகளையும் கண்ணும் கருத்துமாக எழுத்து வடிவமாகவும் ஒளி ஒலி வடிவமாகவும் வரும் தலைமுறையினருக்கு பகர்ந்தளித்துக் கொண்டே இருக்கின்றனர். எந்த ஊரில் சென்றாலும் வரலாற்று முக்கியத்துவம் குறித்த பல்வேறு குறிப்புகளை அவ்வூரில் காணமுடிகின்றது.

எனது எட்டாண்டு கால வெளிநாடு வாழ்வின் அனுபவங்களில் நம் ஊர் பற்றிய எண்ண அலைகளை வெளிக்கொண்டு வர வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையே என உணர்ந்து இம்முயற்சியை மேற்கொண்டுள்ளேன். சாத்தன்கோடு தூய அந்தோணியார் நடுநிலைப் பள்ளியில் பயின்ற எனது வகுப்புத் தோழர்களோடு இதைப் பற்றி பேசியபோது அனைவரும் மிகுந்த உற்சாகமும் ஊக்கமும் இப்பணியினை செய்வதற்கு வழங்கினார்கள். என்

www.malankaralibrary.com

வகுப்புத் தோழமையினருக்கு மனமார்ந்த நன்றியை கூறிக்கொள்கின்றேன்.

நடைக்காவு மண்ணில் பிறந்து வளர்ந்து ஊருக்கு பெருமை சேர்த்த முன்னோர்கள் யாவரையும் நன்றியோடு நினைவு கூர்ந்து அவர்களுக்காக இந்நூலை சமர்ப்பிக்கின்றேன்.

„எங்கும் பசுஞ்சோலையாய் பட்டணிந்த மங்கையாய் இளமையாய் அழகினளாய் முல்லையும் மருதமும் கொண்டு பழமையை அணிந்திருக்கும் எம்மூர் நடைக்காவே! நீர் வாழிய வாழியவே“

இந்நூல் நம்மூரின் பெருமைகளை வருங்கால தலைமுறையினர் அறிந்து கொள்ளவும் நம்மூரின் பெருமைகளை நாமே உணர்ந்து கொள்ளவும் வழிவகுக்கும் என நம்புகிறேன்.

அனைவருக்கும் நன்றி.

மரிய ஜாண் நடைக்காவு

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1. நடைக்காவு ஊராட்சி | 21. ஸ்ரீமகாவிஷ்ணு தேவாலயம் |
| 2. நினைவுச் சின்னங்கள் | 22. சி எஸ் ஐ ஆலயம் |
| 3. நடைக்காவு பெயர்க் காரணம் | 23. கிறிஸ்தரசர் ஆலயம் |
| 4. நம்மூர்த் தமிழ் | 24. மற்று ஆலயங்கள் |
| 5. போக்குவரத்து வசதிகள் | 25. அருட்கன்னியர்கள் |
| 6. தபால் நிலையம் | 26. வளர்ப்பு மிருகங்கள் |
| 7. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி | 27. வணிக வளாகங்கள் |
| 8. கல்வி நிலையங்கள் | 28. சேமிப்பு கலன்கள் |
| 9. உடைக் கலாச்சாரம் | 29. துணிக் கடைகள் |
| 10. மருத்துவக்கூடங்கள் | 30. ஹோட்டல் |
| 11. வீட்டுச் சிகிச்சைகள் | 31. சினிமா தியேட்டர் |
| 12. நெற்பயிரிடுதல் | 32. அரசியல் கட்சிகள் |

www.malankaralibrary.com

| | |
|---|---|
| 13. பனை மரத்தொழில்கள் | 33. டாக்சி கார்கள் |
| 14. தென்னை மரத்தொழில்கள் | 34. மது விற்பனை |
| 15. மரச்சீனி பயிரிடுதல் | 35. மணல் கொள்முதல் |
| 16. வெற்றிலைக்கொடி பயிரிடுதல் | 36. விளையாட்டுக்கள் |
| 17. புளியங்காய் | 37. வெளிநாடுகளில் |
| 18. இயற்கை வளம் | 38. தண்டனைகள் |
| 19. அண்டி ஆபீஸ் | 39. கட்டிட அமைப்பு |
| 20. கட்டிட வேலை | |

## 1. நடைக்காவு ஊராட்சி

நடைக்காவு என்னும் பெயரைக் கொண்ட ஊரானது தென்தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்குப் பகுதியில் முன்சிறை ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ளது. நடைக்காவை மையமாகக் கொண்டு ஊராட்சி அமைப்பு செயல்படுகிறது. இவ்வூராட்சி அமைப்பை நடைக்காவு கிராம பஞ்சாயத்து எனவும் அழைக்கிறார்கள். இஃது கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்கும் கன்னியாகுமரி மக்களவைத் தொகுதிக்கும் உட்பட்டதாகும். நடைக்காவு ஊராட்சி, மொத்தம் ஏழு ஊராட்சி மன்ற வார்டுகளை கொண்டுள்ளது.

கடல் நீர் மட்டத்திற்கு மேலே 29 மீட்டர் உயரத்தில் இவ்வூர் அமைந்துள்ளது. நடைக்காவு ஊராட்சி தமிழகத்தின் தலைநகரான சென்னைக்கு தெற்கே தென் எல்லைப்பகுதியில் 740 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. தமிழகத்தின் தலைநகரம் தொலைதூரத்தில் காணப்பட்டாலும் கேரள மாநிலத்தின்

www.malankaralibrary.com

தலைநகரான திருவனந்தபுரம் ஏறக்குறைய 40 கிலோ மீட்டருக்கு அருகிலேயே ஊராட்சியின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. நடைக்காவிலிருந்து மேற்கு நோக்கி 5 கிலோ மீட்டர் தொலை தூரம் செல்கின்ற போது ஊரம்பு என்ற ஊரைத் தொடர்ந்து கேரள மாநில எல்லையை அடைய முடிகிறது. மேலும் சூழால், கொல்லங்கோடு, நித்திரவிளை, வாவறை, காஞ்சாம்புறம், மங்காடு மற்றும் சூரியகோடு போன்ற ஊர்கள் நடைக்காவுக்கு மிகவும் அருகாமையில் உள்ளன.

Ã.ÀÀஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இவ்வூராட்சியின் மொத்த மக்கள் தொகை 8078 ஆகும். இவர்களில் பெண்கள் 4050 பேரும் ஆண்கள் 4028 பேரும் அடங்குவர். இந்த ஊராட்சியில் ஆனக்குழி, சாத்தன்கோடு, மாவுநின்னவிளை, பாத்திமாநகர், முள்ளுகோடு, பருத்திவிளை, தேவன்சேரி, வெள்ளம்கட்டி, மணலி, கொட்டைக்காடு மற்றும் வேங்குழி போன்ற சிற்றூர்களும் அமைந்துள்ளன.

நடைக்காவு என்பதனை ஆங்கிலத்தில் Nadaikkaveú Nadakavu, Nadaikkavu மற்றும் Nadaikkavoo எனவும் எழுதுவர். ஆனால் உச்சரிப்புக்கேற்ப Nadaikkavu என்றே ஆங்கிலத்தில் எழுதுவது பொருத்தமாக அமையும். நம் ஊர்ப் பெயரிலேயே கேரளாவில் இன்னொரு ஊர் உள்ளது. கேரள மாநிலத்தின் கோழிக்கோடு நகரத்தின் ஒரு முக்கிய பகுதியை நடக்காவு என அழைப்பர். கேரளத்தவர்கள் ஐ காரத்தை உச்சரிப்பதில்லை. நம் ஊர்ப்பெயரை நடைக்காவு என்றே ஐ காரத்தோடு உச்சரிக்கவும் எழுதவும் வேண்டும். கேரள அரசுப்பேருந்துகளில் „நடய்க்காவ்“ எனத் தவறாக ஆனால் மலையாள மொழிநடையில் எழுதி வைத்திருந்தனர்.

## 2. நினைவுச் சின்னங்கள்

www.malankaralibrary.com

காமராஜர் சிலையும் நேசமணி சிலையும் நடைக்காவில் காணப்படும் முக்கிய வரலாற்று நினைவுச் சின்னங்கள் ஆகும்.

காமராஜர் சிலை நடைக்காவு சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சிலை பத்மஸ்ரீ. சிவாஜி கணேசன் அவர்களால் நடைக்காவு சந்திப்பில் 18.7.1976 அன்று திறந்து வைக்கப்பட்டது. இச்சிலையை வடிவமைத்தவர் புகழ்பெற்ற ஆரல்வாய்மொழியைச் சார்ந்த சிற்பி M. லெக்ஷ்மணன் ஆச்சாரி ஆவார்.



www.malankaralibrary.com

நேசமணி சிலை தற்போது ஊராட்சி அலுவலகம் செயல்படும் வளாகத்தில் அதாவது நேசமணி பூங்கா என்ற பெயரில் உருவாக்கப்பட்ட வளாகத்தில் அமைக்கப்பட்டது. தமிழகத்திலேயே நேசமணிக்கு சிலை வைத்த முதல் ஊர் நடைக்காவு ஆகும். பின்னரே நாகர்கோவில் போன்ற மற்ற ஊர்களிலும் நேசமணி அவர்களுக்கு சிலைகள் வைத்துள்ளனர். இந்த நேசமணி சிலையை திறந்து வைப்பதற்காக திரு.காமராஜர் அவர்கள் நடைக்காவுக்கு வந்தார் என்பதை அறிவதில் நாம் பெருமை கொள்கின்றோம்.




இந்த இரண்டு வரலாற்றுச் சின்னங்களையும் நிறுவுவதற்கு மிகவும் உதவியாகவும் அடிப்படையாகவும் செயல்பட்டவர் திரு அசரியா அவர்கள் ஆவார். அன்னார் அவர்களை நடைக்காவு ஊர் மக்கள் நன்றியோடு நினைவு கூர்கின்றனர்.

www.malankaralibrary.com

## 3. நடைக்காவு பெயர்க் காரணம்

நடைக்காவு என்ற பெயரைப் பற்றிய எந்தவிதமான வரலாற்றுத் தெளிவுகளும் எங்கும் காணப்படவில்லை. ஆனால் சுற்றியுள்ள பல்வேறு ஊர்ப் பெயர்களின் பெயர்க் காரணத்தையும் அத்துடன் தொடர்பு கொண்டுள்ள வணிகத்திற்கான பாதைகளையும் முறைகளையும் எண்ணிப் பார்த்தபோது இதனுடைய பெயரை பின்வருமாறு குறிப்பிடுவதற்கு முடிகிறது.

குறிப்பாக நடைக்காவு முற்காலங்களில் மிக முக்கியமான வணிகத்திற்காக பயணம் மேற்கொள்ளும் வழியாக அமைந்திருக்கலாம். குறிப்பாக கூறுகின்ற போது களியக்காவிளை மிக முக்கியமான சந்தைப் பகுதியாகவும் தூத்தூர் போன்ற கடற்கரையோர பகுதிகளிலிருந்து மக்கள் பொருட்களை களியக்காவிளை சந்தைக்கு கொண்டு செல்வதாகவும் திரும்பி நடைக்காவு வழியாகவே ஊருக்கு செல்வதாகவும் கருதப்படுகிறது. தூத்தூர் போன்ற கடற்கரை கிராமங்களிலிருந்து களியக்காவிளை செல்லும் மிக முக்கியமான வழியாக நடைக்காவு அமைந்திருக்கலாம். இதற்கு சான்றாக கருங்கற்களால் உருவாக்கப்பட்ட ஏராளமான சுமடுதாங்கிகள் இப்பாதையில் காணப்பட்டன. சுமடுகளை இவற்றின் மேல் வைத்து சற்று அமர்ந்து ஓய்வெடுப்பர். சாலை விரிவாக்கம் செய்யப்பட்ட போது இவை முற்றிலுமாக அழிக்கப்பட்டு விட்டன.

நடைக்காவு ஊர்ப்பகுதி முழுவதுமாக முற்காலங்களில் மிகப்பெரிய ஒரு காவு அமைந்திருந்ததாக கருதலாம். இன்றும் சாத்தன்கோடு கீழ்பகுதியில் ஒரு சிறு காவு அமைந்திருந்ததாக ஒரு சில தடயங்கள் தென்படுகின்றன. முன்னோர்களும் பல விதங்களில் இவை பற்றி பேசி இருக்கிறார்கள். தற்போது இவை மனிதக்குடியேற்றத்தின் காரணமாக அடர்த்தியான மரங்கள் அழிக்கப்பட்டு காவு பகுதி குறுகிய

www.malankaralibrary.com

பகுதிக்குள் அமைந்துள்ளது. இந்த பகுதி முழுவதுமே விரிந்து பரந்த காடாகவும் அதன் மையப்பகுதியில் காவும் இருந்திருக்கலாம்.

கடலோர மற்றும் நடைக்காவு பகுதி வாழ் மக்கள் களியக்காவிளை சந்தையை நோக்கிச் செல்ல இந்தப் பாதையைத் தான் பயன்படுத்தியிருக்க வேண்டும். இவ்வாறு மக்கள் இந்த நடைபாதையை காட்டுக்குள்ளே காவின் உள்ளே இருக்கக்கூடிய ஒரு பாதை என்றும் காவு வழியாக அமைந்துள்ள நடைபாதை என்றும் சுருக்கமாக குறிப்பிட இவ்வழியை நடைக்காவு என அழைத்திருக்கலாம்.

அப்படியாயின் களியக்காவிளையில் இருந்தும் அவரவர் ஊர்களிலிருந்தும் வியாபாரத்திற்காக கடற்கரை கிராமங்களுக்கு நடந்து செல்லக்கூடிய பகுதியில் அவர்கள் சோர்வினால் ஒய்வு எடுக்கக் கூடிய பகுதியாக நித்திரவிளை இருந்திருக்கலாம். நித்திரை என்றால் தூக்கம் என்பது பொருள். அவ்வாறே நித்திரவிளை என்பதன் பொருள் தூங்கும் விளைப் பகுதி ஆகும். இது கடற்கரை கிராமங்களுக்கு மிகவும் அருகில் அமைந்துள்ளது.

இதன் அடிப்படையில் மேலும் ஒருசில எண்ணங்கள் மனதுக்கு வருகின்றன. சாத்தன்கோடு சந்திப்பிலிருந்து மிகவும் நீண்ட சரிவான சாய்ந்த இறக்கம் ஆரம்பமாகிறது. இஃது கோனசேரி வரை ஏறக்குறைய இரண்டு கிலோமீட்டர் தூரத்துக்கு நீண்டுள்ளது. அதிகாலை வேளையில் பயணம் செய்யும் போது வீடுகள் எதுவும் இல்லாமல் இருள் சூழ்ந்த இப்பகுதியிலிருந்து சாய்ந்த பாதை ஆரம்பமாகிறது. சாய்ந்த வழி ஆரம்பமாகும் இடத்தை கோடு என அடையாளப்படுத்தி அவ்விடத்தை „சாய்ந்தகோடு“ எனக் குறிப்பிட்டிருக்கலாம். இப்பெயர் பின்னர் பேச்சுவழக்கில் „சாய்ந்தான்கோடு“

www.malankaralibrary.com

எனவும் பின்னர் மருவி „சாத்தன்கோடு“ எனவும் பெயர் பெற்றிருக்கலாம் எனக் கருதுகிறேன்.

தொடர்ந்து இவ்வழியே கீழ்ப்பகுதியை அடைந்தவுடன் கோணலான சேரிப்பகுதி வழியாக மேற்பகுதியை எட்டுகிறார்கள். கோணலான சரிந்த இச்சேரிப் பகுதி ஆரம்பமாகும் இடத்தை கோனசேரி எனப் பெயரிட்டிருக்கலாம். இன்றும் நடைக்காவிலிருந்து நேராக உள்ள சாலை கோனசேரியிலிருந்து சூரியகோடு செல்கின்ற பாதை கோணலாகவே காணப்படுகிறது. அப்படியே இந்த சேரிப் பகுதியை தாண்டி ஏறி மேலே செல்கின்ற போது வணிகர்களுக்கு சூரியனின் கதிர்கள் சற்று தெரியும். எனவே இவ்விடத்தை „சூரியகோடு“ என்றிருக்கலாம். இதன் அடிப்படையில் சாத்தன்கோடு, கோனசேரி மற்றும் சூரியகோடு என்ற இடப்பெயர்கள் நடைக்காவு என்ற பெயரைப் போன்று மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது என அனுமானிக்கப்படுகிறது.

## 4. நம்மூர்த் தமிழ்

இவ்வூராட்சியை சார்ந்த நபர்களின் தாய்மொழி தமிழ்மொழியே ஆகும். அனைவரும் சரளமாக சற்று மலையாள மொழி கலந்த பேச்சுத் தமிழை பேசுகின்றார்கள். பல நேரங்களிலும் நாம் பேசுகின்றதனை கொச்சைத் தமிழ் என பிறர் கிண்டல் செய்வர். ஆனால் இதனை கொச்சைத் தமிழ் என்பதை விட நம் ஊர்த்தமிழ் என்று கூறுவதே பொருந்தும். நமது முன்னோர்கள் நம் ஊர்த் தமிழையே பேசி வந்தனர். எனவே நம் ஊர்த் தமிழே நமக்கு உயிர். மலையாள மொழி பேசக்கூடிய நபர்களும் ஆங்காங்கே ஒரு சிலர் காணப்படுகின்றனர். ஆயினும் இங்கு வாழும் நபர்கள் பலர் மலையாள மொழியையும் தமிழ் மொழியையும் ஒரு போல புரிந்து கொள்ளும் திறமையை கொண்டு உள்ளனர். தற்போது அந்நிய நாட்டு கலாச்சாரத்தின் விளைவாக

www.malankaralibrary.com

ஆங்கில மொழியிலும் மக்கள் பேசவும் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளவும் செய்கின்றனர்.

தமிழை இலக்கியத் தமிழ், உரைநடைத் தமிழ் மற்றும் பேச்சுத் தமிழ் எனப் பிரிக்கலாம். இலக்கியத் தமிழ் என்பது இலக்கியக் சொற்களால் பிழையின்றி மிகப்பெரும் அறிஞர்களால் எழுதப்படுபவை. இவை பெரும்பாலும் கவிதை மற்றும் பாடல்கள் போன்றவற்றில் பயன்படுத்தப்படுகின்றன. உரைநடைத் தமிழ் என்பது இலக்கணப் பிழையின்றி எளிதில் அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் எழுத்து வடிவில் கொண்டு வருவதே ஆகும். கட்டுரைகள் மற்றும் நூல்களில் எழுதுகின்ற போது இத்தகைய மொழிநடையை பயன்படுத்துகிறோம். பேச்சுத் தமிழ் என்பது தமிழகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் குறிப்பாக ஒவ்வொரு ஊருக்கும் தனித்தன்மையோடு திகழ்கின்ற ஒரு தமிழ் மொழி வகையே பேச்சுத்தமிழ் என்கிறோம்.

இத்தகைய சொற்களை கொச்சைத் தமிழ் என கூறுவர். ஆனால் இவற்றை கொச்சைத் தமிழ் என்று நாம் தரம் தாழ்த்துவதை விட ஒவ்வொரு ஊருக்கும் உரிமை கொண்ட உயிர்த் தமிழ் என்றே நம்மால் பொருள் கூற முடியும்.

இன்று ஜெர்மனி போன்ற பல ஐரோப்பிய நாடுகளிலும் பழங்காலங்களில் ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு விதமான நம்மூர் கொச்சைத் தமிழ் போன்ற அவர்களது மொழியிலான பேச்சுமொழி வழக்குகள் இருந்து வந்தன. தற்போது இத்தகைய பேச்சு வழக்குகள் மறைந்து போயின என்றாலும் அவற்றை முதியவர்களிடம் இருந்து கற்றறிந்து அவற்றை எழுத்து வடிவமாக்கி தற்போதும் பல்வேறு முக்கிய நிகழ்வுகளில் பயன்படுத்தி வருகின்றனர். நம் ஊரிலும் குறிப்பாக மங்காடு ஆற்றுக்கு மேற்குப் பகுதியில் உள்ள அனைத்து ஊர்களிலும் பரவலாக காணப்படக்கூடிய தமிழ்ச் சொற்களைத் தான் நாமும் பயன்படுத்தி வருகிறோம். இது நம் உயிர்த் தமிழ்.

www.malankaralibrary.com

தொலை தூரங்களில் நாம் பணிபுரிந்தாலும் பல்வேறு பயணங்கள் மேற்கொண்டாலும் பல்வேறு பணிகள் நிமித்தமாக வருடங்களாக வேறு எங்கேனும் நாம் அமைந்திருந்தாலும் நம் உயிரான நம்மூர்த் தமிழ் மொழியை கேட்கின்ற போதே நம் மனதுக்குள் ஒரு இனிமை கிடைக்கும் நம் மனதிற்கு ஒரு புத்துணர்ச்சி உருவாகும்.

நாகரீகமயமாக்கல் காரணமாக இத்தகைய பல தமிழ்ச் சொற்கள் மறைந்து போயின என்றாலும் பல சொற்களும் மாற்றமடைந்துள்ளன. இருந்தாலும் ஏராளமான சொற்கள் இன்றும் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. அப்படிப்பட்ட ஒரு சில உறவுமுறைச் சொற்களை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். கொப்பன், கொம்மா, மச்சினன், மயினி, கொழுந்தியாள், பெண்ணே, லேய் மற்றும் பலப்பல.

மேலும் ஒரு சில சொற்கள் வேற்று மொழிகளான மலையாளம் மற்றும் ஆங்கிலம் கலந்து ஒரு சில மாற்றங்களோடு இதனை பயன்படுத்தி வருகிறார்கள். ஒருவேளை இத்தகைய பிற மொழியில் இருந்து வந்த நம்மூர்ச் சொற்கள் சரியாக உச்சரிக்கவில்லை என்றாலும் நாம் அவற்றை தமிழ்ச் சொற்களாக அவற்றை மாற்றி ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அத்தகைய நிலையில் சொல்லப்பட்டாலும் அவை மக்களால் புரிந்து கொள்ளப்படும். இஃது தவறல்ல. பிற மொழிச்சொற்களை நம்மூர்த்தமிழில் ஏற்றுக் கொண்டு பயன்படுத்துகிறோம். பல நேரங்களிலும் இவற்றை, வாக்கியங்களின் பெயர்ச்சொல் மற்றும் வினைச்சொல் போன்றவற்றைக் கொண்டே புரிந்து கொள்ள முடியும். எடுத்துக்காட்டாக, „பிள்ளே எனக்க போணிலே ஜார்ஜ் தீந்திருக்கு. ஜார்ஜ் செய்து தருவியா................“ப்குழந்தாய் என் அலைபேசியில் மின்னேற்றம் செய்து உதவுவாயா“ என்பதுவே இதன் பொருள்.

எனவே நம்மூரில் பயன்பாட்டில் உள்ள இத்தகைய மேலும் பல நூற்றுக்கணக்கான சொற்களை கொச்சைத் தமிழ் என்பதை விட பிற மொழிச் சொற்களை நம்மூர்த்

www.malankaralibrary.com

தமிழாக்கிய „நம் ஊர்த் தமிழ்“ப்„நம் உயிர்த் தமிழ்“ என்றே கூறலாம்.

ஒரு சில நபர்கள் இத்தகைய தமிழை குடும்ப உறவுகளில் பேசி மகிழ்கின்ற போது அந்த பேச்சிலேயே ஒரு தனி இனிமை உண்டு. அந்த பேச்சிலேயே ஒரு தனி ஓசை உண்டு. தமிழின் இனிமையோடு கலந்த அத்தகைய ஓசையை கேட்பது மிகவும் அருமையானதாகவே இருக்கும். குழந்தைகள் தூங்குவதற்காக பாடப்படும் தாய்மார்களின் தாராட்டுப்பாடல்கள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். இப்படிப்பட்ட இசையோடு தமிழை கேட்பது என்பது வருங்கால தலைமுறையினருக்கு மிகவும் அரிதான காரியமாகும்.

## 5. போக்குவரத்து வசதிகள்

நடைக்காவு எப்போதும் முச்சந்திப்புக்கு பெயர் பெற்றது. சுற்றியுள்ள பகுதிகள் அனைத்திலும் மிகவும் அதிகமாக முச்சந்திப்புகள் காணப்படுகின்றன. குறிப்பாக நடைக்காவு சந்திப்பே முச்சந்திப்பாகும். ஆலங்கோடு திரும்பும் சாலைச் சந்திப்பு, சாத்தன்கோடு சந்திப்பு, போன்ற முச்சந்திப்புகள் தான் அதிகமாக இந்த ஊராட்சியில் காணப்படுகின்றன.

நடைக்காவிலிருந்து மேற்குப் பகுதி வழியாக நாம் செல்கின்றபோது சூழால் மற்றும் ஊரம்பு ஊர்களைத் தொடர்ந்து கேரள எல்லையை அடைந்து திருவனந்தபுரத்தை நோக்கி இந்த வழி செல்கிறது. நடைக்காவிலிருந்து தெற்கு நோக்கிய சாலை வழியாக செல்கின்றபோது நித்திரவிளை மற்றும் சின்னத்துறை போன்ற கடலோரப் பகுதிகளுக்கு செல்கின்றது. நடைக்காவிலிருந்து வடக்குப் பகுதியான சாலை வழியாக செல்கின்றபோது பொன்னப்பநகர் மற்றும் கோழிவிளை வழியாக தேசிய நெடுஞ்சாலை 47 -யை ஏழு கிலோமீட்டர் தூரத்தில் களியக்காவிளையை அடைந்து தொடர்ந்து தொலைதூரப் பயணங்கள் செய்வதற்கு உதவுகின்றது. தற்போது மிகப்பெரிய நான்குவழிச்சாலை

www.malankaralibrary.com

தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த நான்கு வழிச்சாலை பொன்னப்ப நகரில் குறுக்கிடுவதால் பொன்னப்ப நகர் வழியாக நான்குவழிச்சாலையில் பயணித்து திருவனந்தபுரம் கன்னியாகுமரி போன்ற இடங்களுக்கு எளிதில் சென்றடைவதற்கு இது உதவுகிறது.

முற்காலங்களில் நடந்தே வியாபாரத்திற்காக மக்கள் பயணம் செய்தனர். பின்னர் காளை வண்டிகள் பயணத்திற்காக பயன்படுத்தப்பட்டது. பலர் காளை வண்டிகளையும் காளைகளையும் சொந்தமாக வைத்திருந்தனர். காளைகளின் கால்களில் இலாடம் பதிக்கக்கூடிய நிலையம் நடைக்காவிலும் செயல்பட்டு வந்தது. அதைத்தொடர்ந்து பேருந்து போக்குவரத்து வசதிகள் ஆரம்பித்தன. இருப்பினும் தேவையான போதிய போக்குவரத்து வசதிகள் இல்லாமல் இருந்தபோது டிரக்கர் வசதி களியக்காவிளையில் இருந்து நடைக்காவு நோக்கி ஆரம்பிக்கப்பட்டது. இந்த டிரக்கரில் ஏறக்குறைய பத்து பேர் மட்டுமே அனுமதிக்கப்பட்ட பயணிகளாக இருந்தாலும் ஏறக்குறைய 30க்கும் மேற்பட்ட நபர்கள் நெருங்கி அமர்ந்தவாறும் பின்புறத்திலும் இரண்டு புறங்களிலும் தூங்கி நின்றவாறும் பயணத்தை மேற்கொண்டனர். இதனுடைய ஓட்டுனருக்கு இது ஒரு சவாலான நிலையாக இருந்தாலும் மக்கள் மகிழ்வோடு இந்த பயண முறையை பயன்படுத்தி வந்தார்கள்.

பின்னர் வாகனத்திற்கு உள்ளேயே அமர்ந்து பயணம் செய்யக்கூடிய விதத்தில் வேன் வசதி அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த வேன்களிலும் மக்கள் உட்புறங்களில் குனிந்தவாறு நின்று பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்படி இருக்க தற்போதைய காலகட்டங்களில் உள்ளதைப் போன்று மினி வேன்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனுள் மக்கள் நின்றவாறும் பயணம் செய்கின்றனர். இந்த வேன்கள் நித்திரவிளையிலிருந்து நடைக்காவு வழியாக கொல்லங்கோட்டிற்கும், நித்திரவிளையிலிருந்து

www.malankaralibrary.com

நடைக்காவு வழியாக களியக்காவிளைக்கும் தடங்கள் அமைத்திருந்தன. பின்னர் அனைத்து வேன்களும் உரிய அனுமதி பெறாமைமையால் நிறுத்தப்பட்டன. தமிழக அரசின் அனுமதியோடு மினி பேருந்து ஒன்று நடைக்காவு வழியாக தற்போது களியக்காவிளைக்கு இயக்கப்பட்டு வருகிறது. இவை தவிர பல்வேறு தமிழக அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் படந்தாலுமூட்டில் செயல்படும் குழித்துறை பணிமனையிலிருந்து நடைக்காவு வழியாக இயக்கப்படுகின்றன.

82A பேருந்து மார்த்தாண்டத்தில் இருந்து களியக்காவிளை வழியாக நடைக்காவு சந்திப்பை அடைந்து மீண்டும் சூழால் வழியாக கொல்லங்கோட்டை அடைகிறது.

82B என்ற பேருந்து மார்த்தாண்டத்தில் இருந்து படந்தாலுமூடு, அதங்கோடு, மங்காடு, நித்திரவிளை வழியாக நடைக்காவு சந்திப்பை அடைந்து தொடர்ந்து சூழால் வழியாக கொல்லங்கோட்டை சென்றடைகிறது.

82K என்ற பேருந்து மார்த்தாண்டத்தில் இருந்து களியக்காவிளை, கோனசேரி வழியாக நடைக்காவு சந்திப்பை அடைந்து மீண்டும் போராங்கோடு, பாலவிளை வழியாக ததேயுபுரத்தை சென்றடைகிறது.

82M என்ற பேருந்து மார்த்தாண்டத்தில் இருந்து குழித்துறை, அதங்கோடு, மங்காடு, வாவறை வழியாக நடைக்காவு சந்திப்பை அடைந்து கொல்லங்கோடு சென்றடைகிறது. இந்த பேருந்து மதியம் நடைக்காவு என்ற பெயர்ப் பலகை வைத்தவாறு நடைக்காவு சந்திப்பு வரை வந்து மார்த்தாண்டத்தை நோக்கி திரும்பி செல்கிறது.

PCG 82F என்ற பேருந்து மார்த்தாண்டத்தில் இருந்து களியக்காவிளை, குளப்புறம், பாத்திமாநகர் வழியாக நடைக்காவு சந்திப்பை அடைந்து நித்திரவிளை, தூத்தூர்

www.malankaralibrary.com

வழியாக இரையுமன்துறையை சென்றடைகிறது. இந்த பேருந்து சந்தைக்கு செல்லக்கூடிய நபர்கள் தங்களுடைய சுமைகளை வைக்கக் கூடிய விதத்தில் வடிவமைக்கப்பட்ட பேருந்து ஆகும். எனவேதான் இது பிசிஜி எனப்படுகிறது. பிசிஜி என்பதன் பொருள் பயணிகள் தங்கள் சுமைகளோடு பயணம் செய்தல் என்பது பொருள்.

83A என்ற பேருந்து மார்த்தாண்டத்தில் இருந்து களியக்காவிளை கோனசேரி வழியாக நடைக்காவு சந்திப்பை அடைந்து நித்திரவிளை வழியாக இரையுமன்துறையை சென்றடைகிறது.

83B என்ற பேருந்து மார்த்தாண்டத்தில் இருந்து களியக்காவிளை குழிவிளை, செம்மான்விளை, வாவறை வழியாக நடைக்காவு சந்திப்பை அடைந்து மீண்டும் கிராத்தூர் வழியாக வள்ளவிளையை சென்றடைகிறது.

83C என்ற பேருந்து மார்த்தாண்டத்தில் 2 வழித்தடங்களில் இயக்கப்பட்டு வந்தது. ஒரு முறை மார்த்தாண்டத்தில் இருந்து குழித்துறை வழியாக குழித்துறை, அதங்கோடு, செம்மான்விளை, வாவறை வழியாக நடைக்காவு சந்திப்பை அடைந்து பின்னர் நித்திரவிளை வழியாக இரையுமன்துறையை சென்றடைகிறது. இரண்டாவது வழித்தடத்தில் மார்த்தாண்டத்திலிருந்து களியக்காவிளை, மங்காடு, ஆலங்கோடு வழியாக நடைக்காவு சந்திப்பை அடைந்து பின்னர் நித்திரவிளை, சின்னத்துறை வழியாக நீரோடி காலனியை சென்றடைகிறது. இந்தப் பேருந்து காலை 8 மணிக்கு நடைக்காவு என்ற பெயர்ப்பலகை வைத்து நடைக்காவு சந்திப்பை வந்தடைந்து திரும்பி செல்கிறது. மாணவர்கள் பலர் இந்த தடத்தை பயன்படுத்தி வந்தனர். பின்னர் பயணிகளின் வரத்து குறைவு காரணமாக இரண்டு வழித்தடங்களும் தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

www.malankaralibrary.com

83D என்ற பேருந்து மார்த்தாண்டத்தில் இருந்து களியக்காவிளை, மங்காடு, கோயிக்கத்தோப்பு வழியாக நடைக்காவு சந்திப்பை வந்தடைந்து மீண்டும் நம்பாளி, கிராத்தூர், கண்ணனாகம் வழியாக தமிழக எல்லையான காக்கவிளையை சென்றடைகிறது. இந்த பேருந்தும் பயணிகளின் குறைவான பயன்பாட்டின் காரணமாக நிறுத்தப்பட்டது.

311N என்ற பேருந்து நாகர்கோவிலில் இருந்து தக்கலை, மார்த்தாண்டம், களியக்காவிளை, வாவறை வழியாக நடைக்காவு சந்திப்பை அடைந்து பின்னர் கிராத்தூர், கண்ணனாகம் வழியாக கொல்லங்கோட்டை சென்றடைகிறது. இந்தப் பேருந்து தான் நடைக்காவிலிருந்து அதிகாலை 4 மணி அளவில் புறப்பட்டு செல்லக்கூடிய முக்கிய பேருந்தாக இருந்தது. வியாபாரிகளும் தொலைதூரப் பயணிகளும் இப்பேருந்தை மிகவும் விரும்பி பயன்படுத்தினர். இந்த பேருந்தும் பயணிகளின் குறைவான பயன்பாட்டின் காரணமாக நிறுத்தப்பட்டது.

505 என்ற தடம் எண் கொண்ட பேருந்து காலை 7.30 மணியளவில் இரையுமன்துறையிலிருந்து புறப்பட்டு நித்திரவிளை வழியாக நடைக்காவு சந்திப்பை அடைந்து பின்னர் களியக்காவிளை, நாகர்கோவில், திருநெல்வேலி வழியாக மதுரையை சென்றடைகிறது.

தமிழக அரசு பேருந்துகள் மட்டுமன்றி கேரள அரசுக்கு சொந்தமான பேருந்துகளும் நடைக்காவு சந்திப்பு வழியாக இயக்கப்பட்டு வந்தன. குறிப்பாக ஊரம்பு சந்திப்பிலிருந்து நடைக்காவு சந்திப்பு வழியாக மங்காடு, களியக்காவிளை வழியாக திருவனந்தபுரம், மெடிக்கல் காலேஜ் நோக்கி ஒரு பேருந்தும், களியக்காவிளையில் இருந்து நடைக்காவு வழியாக கிராத்தூர், கொல்லங்கோடு, உச்சக்கடை, நெய்யாற்றின்கரை வழியாக திருவனந்தபுரத்திற்கு ஒரு

பேருந்தும், களியக்காவிளையில் இருந்து நடைக்காவு சந்திப்பு வழியாக சின்னத்துறை, கொல்லங்கோடு வழியாக கொல்லம், எர்ணாகுளத்துக்கு ஒரு பேருந்தும் இயக்கப்பட்டு வந்தது. குறைவான பயணிகளின் காரணத்தினால் இந்த தடங்களும் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த அனைத்து பேருந்துகளையும் பல நபர்களும் விரும்பி பயன்படுத்தி வந்தார்கள். மேலும் பல்வேறு வழித்தடங்கள் நடைக்காவு வழியாக அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் போதிய பயணிகள் இன்றி நிறுத்தப்பட்டன. இரு சக்கர மோட்டார் வாகனங்களின் அதிகரிப்பு அரசுப் பேருந்துகளின் பயன்பாட்டை வெகுவாகப் பாதித்துள்ளது.

நடைக்காவிலிருந்து 35 கிலோ மீட்டருக்கு மேற்காக கேரள மாநிலத்தின் திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள பன்னாட்டு விமான நிலையம் தான் மிகவும் அருகாமையில் உள்ளது. இங்கு வாழும் நபர்கள் அனைவரும் இந்த விமான நிலையத்தைத் தான் பயன்படுத்தி வருகிறார்கள். ஆனால் தமிழகத்தில் அமைந்துள்ள மிகவும் அருகாமையில் உள்ள விமான நிலையம் 150 கிலோ மீட்டர் தொலைவில் தூத்துக்குடியில் அமைந்துள்ளது.

மக்கள் ரயிலில் பயணம் செய்வதற்காக பத்து கிலோமீட்டருக்கு தொலைவில் தமிழக கேரள எல்லையான களியக்காவிளைக்கு மிக அருகிலேயே பாறசாலை இரயில் நிலையம் அமைந்துள்ளது. மக்கள் பலரும் குறுகிய பயணத்திற்காக இந்த இரயில் நிலையத்தை தான் அதிகமாக பயன்படுத்தி வருகிறார்கள். ஆனால் தொலைதூர பயணத்திற்கு செல்லக்கூடிய நபர்கள் ஏறக்குறைய பன்னிரண்டு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள மார்த்தாண்டம் இரயில் நிலையத்தையும் பயன்படுத்தி வருகிறார்கள். மிகவும் முக்கிய பெரிய இரயில் நிலையங்களாக

www.malankaralibrary.com

நாகர்கோவில் மற்றும் திருவனந்தபுரம் ரயில் நிலையங்கள் சம அளவில் ஏறக்குறைய 40 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளன.

## 6. தபால் நிலையம்

நடைக்காவில் அமைந்துள்ள தபால் நிலையம் „சாத்தன்கோடு தபால் நிலையம்" என்ற பெயரால் அறியப்படுகிறது. தொடக்ககாலம் முதலே இதன் அமைவிடம் நடைக்காவு சந்திப்புக்கு அருகிலேயே ஒரு தனியார் கட்டிடத்தில் செயல்பட்டு வந்தது. தற்போது இஃது நேசமணி பூங்காவினுள் ஊராட்சி அலுவலகத்துக்கு அருகே செயல்பட்டு வருகிறது. இப்போதும் மக்கள் இதனை சாத்தன்கோடு தபால் நிலையம் என்றே அழைக்கிறார்கள். இதன் அஞ்சல் எண் 629153 ஆகும்.

வீட்டு முகவரிகளில் சாத்தன்கோடு அஞ்சல் என்று எழுதுகின்ற போது இந்த தபால் நிலையம் கிளை தபால் நிலையம் ஆக இருப்பதனால் இதனுடைய தலைமை தபால் நிலையம் ஆன களியக்காவிளை வழி என்பதையும் மக்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த தபால் நிலையத்திற்கு முற்காலங்களில் களியக்காவிளையிலிருந்து தபால்கள் எல்லா நாள்களிலும் 8A எனஅற வழித்தடப் பேருந்தில் கொண்டுவரப்படுகிறது. தபால் நிலையத்தில் எப்போதும் ஒரு தபால் நிலைய அதிகாரி ஒருவர் அமர்ந்திருப்பார். தபால்களை பிரித்து கொடுக்கக்கூடிய அதிகாரி ஒவ்வொரு வீடாக சென்று கடிதங்களை வீடுகளில் ஒப்படைப்பார். தற்போது மக்கள் கடிதப் போக்குவரத்திற்காக மட்டுமல்லாமல் பணப்பரிமாற்றத்திற்காகவும் சேமிப்புக் கணக்குகளுக்காகவும் அரசு சார்ந்த உதவிகளைப் பெறுவதற்காகவும் இந்த தபால் நிலையத்தை அதிகமாக பயன்படுத்தி வருகிறார்கள்.

## 7. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

www.malankaralibrary.com

நடைக்காவுக்கு பெருமை சேர்க்கக் கூடிய வகையில் அமைந்திருப்பது தான் நடைக்காவு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி. முற்காலங்களில் இந்த வங்கி சாத்தன்கோடு பகுதியில் செயல்பட்டு வந்தது. இப்போது நடைக்காவு சந்திப்புக்கு அருகே சிஎஸ்ஐ ஆலயத்திற்கு எதிரில் செயல்பட்டு வருகிறது. எப்போதும் மக்கள் நெருக்கம் மிகுந்த ஒரு வங்கியாக அதிகமான வாடிக்கையாளர்கள் பயன்படுத்தக்கூடிய வங்கியாக அமைந்துள்ளது. நடைக்காவில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி பற்றி தெரியாத எந்த ஒரு நபரும் இருக்க மாட்டார்கள். அனைத்து தரப்பினரும் அனைத்து நபர்களும் பயன்படுத்தக்கூடிய ஒரு வங்கியாக இந்த வங்கி செயல்பட்டு வருகிறது. ஏடிஎம் சேவை உள்ளதனால் மக்கள் எப்போதும் இதனை பயன்படுத்தி வருகிறார்கள்.

இவ்வங்கியின் IFSC code: IOBA0000944 மற்றும் MICR code: 629020110 ஆகும். இவ்வங்கியின் முகவரி ஆங்கிலத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. INDIAN OVERSEAS BANK NADAIKKAVOOú 63 D Nadaikavoo Main Roadú Chathan Code Post, Nadaikavoo 629 153, Kanyakumari - Tamil Nadu; இவ்வங்கியின் நடைக்காவு கிளையின் குறியீட்டு எண் Branch code 000944 ஆகும். திங்கள் முதல் வெள்ளி வரை நாட்களில் காலை 10 AM முதல் மாலை 4 PM வரையிலும் செயல்படுகிறது. மாதத்தின் இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமைகள் விடுமுறை நாட்களாகும். மற்று சனிக்கிழமைகளில் காலை 10 AM முதல் மாலை 4 PM வரையிலும் செயல்படுகிறது

## 8. கல்வி நிலையங்கள்

நடைக்காவு 93 சதவீதம் கல்வி அறிவு கொண்ட ஊராக உள்ளது. தமிழக மாநில அளவில் கல்வி அறிவின் அளவு வெறும் 80 சதவீதம் மட்டுமே ஆகும். நாம் இத்தகைய பெரும் எண்ணிக்கையை கொண்டுள்ளமையால் பெருமை கொள்கின்றோம். முற்காலங்களில் நம்மூர்

www.malankaralibrary.com

மக்கள் சிலர் முஞ்சிறை பள்ளிக்கூடத்தில் மேற்படிப்பு பயின்றுள்ளனர். இதுவே அன்றைய காலத்தில் மிகவும் அருகாமையில் அமைந்திருந்த பள்ளிக்கூடம் ஆகும். நடைக்காவுக்கு பெருமை சேர்க்கக் கூடிய இரண்டு கல்விக்கூடங்கள் உள்ளன. ஒன்று புனித அந்தோணியார் நடுநிலைப்பள்ளி. மற்றும் அரசு உயர்நிலைப்பள்ளி.



பல ஆண்டுகளாக சாத்தன்கோடு பகுதியில் அமைந்திருக்கக் கூடிய புனித அந்தோனியார் நடுநிலைப்பள்ளி ஏறக்குறைய 1935 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இதனுடைய பெயர்களில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இஃது மெதுகும்மல் பள்ளிக்கூடம் எனவும், சாத்தன்கோடு பள்ளிக்கூடம் எனவும், நடைக்காவின் பழைய பள்ளிக்கூடம் எனவும் அழைக்கப்படுகிறது. இப்பள்ளிக்கூடத்திலும் ஏராளமான மாணவர்கள் பயின்று பயன்பெற்று வருகிறார்கள்.

www.malankaralibrary.com




அரசு உயர்நிலைப்பள்ளி நடைக்காவு சந்திப்புக்கு மிக அருகிலேயே முற்காலத்தில் நடுநிலை பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டு தற்போது உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்வு செய்யப்பட்டுள்ளது. ஏராளமான மாணவர்கள் இந்த பள்ளிக்கூடத்தின் வாயிலாக பயனடைந்துள்ளனர். இதனை மக்கள் நடைக்காவின் புதிய பள்ளி என்று அழைக்கிறார்கள்.

இந்த பள்ளிக்கூடங்களில் பயின்ற முன்னாள் மாணவர்கள் தற்போது அடிக்கடி வருடத்திற்கு ஒருமுறை தங்களுடைய வகுப்பு தோழர்களோடு சேர்ந்து தங்கள் பள்ளிக்கூட அனுபவங்களை பகிர்ந்து வருகிறார்கள். நடைக்காவைச் சுற்றியுள்ள பகுதிகளில் இந்த இரண்டு பள்ளிக்கூடங்களை தவிர மேலும் பல ஆங்கில பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு சில இப்போதும் செயல்பட்டு வருகின்றன.

www.malankaralibrary.com

பள்ளிக்கூடங்களை தவிர ஏராளமான குழந்தைகளுக்கான மழலை கல்விக்கூடங்கள் அல்லது நர்சரி வகுப்புகள் பல இடங்களில் துவங்கப்பட்டு போதிய மாணவர்களின் எண்ணிக்கை இல்லாமையால் நிறுத்தப்பட்டன. ஒரு சில இடங்களில் இப்போதும் இவை செயல்பட்டு வருகின்றன.

பிறின்ஸ் டூட்டோறியல்ஸ் முற்காலங்களில் மிகவும் பெயர் பெற்ற டியூசன் சென்டர் ஆகும். ஏராளமான மாணவர்கள் இதனை பயன்படுத்தி வந்தனர். குறிப்பாக கோடை விடுமுறை நாட்களில் நடைபெறும் வகுப்புகள் மாணவர்களுக்கு பெரிதும் பயன்பட்டன. இந்த நிறுவனத்தின் தனிச்சிறப்பாக அறிவியல் ஆராய்ச்சிக்கூடங்கள் அமைந்திருந்தன. மாணவர்கள் பயன்படுத்தவும் அனுமதிக்கப்பட்டனர். திரு அசரியா அவர்களின் தலைமையில் இந்நிறுவனம் நடத்தப்பட்டது. இதனுடைய கிளை நிறுவனம் ஒன்று மார்த்தாண்டத்திலும் செயல்பட்டு வந்தது.

மேலும் பலவகை பயிற்சிக் கூடங்கள் ஆங்காங்கே அமைந்திருக்கின்றன. குறிப்பாக தையல் பயிற்சி கூடங்கள் ஏராளமாக காணப்படுகின்றன. மேலும் கம்ப்யூட்டர் பயில்வதற்கான ஒரு பயிற்சிக்கூடம் கிறிஸ்து அரசர் கம்பயூட்டர் பயிற்சி நிலையம் என்ற பெயரில் அமைக்கப்பட்டது. துவக்க காலத்தில் ஏராளமான மாணவர்கள் விரும்பி பயன்படுத்தப்பட்ட இந்த கம்ப்யூட்டர் பயிற்சி நிலைய பின்னர் மாணவர்களின் குறைவான வருகை காரணமாக அது நிறுத்தப்பட்டது.

## 9. உடைக் கலாச்சாரம்

ஆண்கள் திருமணம் போன்ற முக்கிய நிகழ்வுகளுக்கு வெள்ளை வேட்டியும் சட்டையும் அணிந்தவாறு செல்வர். நீண்ட காலமாக இம்முறை தான் பயன்பாட்டில் இருந்து வந்தது. ஆனால் தற்போது நீளமான கால்சட்டை அணியும் வழக்கமும் அதிகமாக உள்ளது.

www.malankaralibrary.com

இருப்பினும் வேட்டி சட்டை போன்றவற்றை மிகவும் பெருமையாக கருதி விரும்பி நாள்தோறும் முக்கிய நிகழ்வுகளுக்கு அணிந்து வருபவர்களும் தற்போது ஏராளமானவர்கள் உள்ளனர்.

சிறு குழந்தை பருவத்தில் பள்ளிக்கூடம் செல்லும் பருவம் வரையிலும் சிறிய உடுப்பு போன்ற துணிகளை பல வீடுகளிலும் அவர்களே தைத்து பயன்படுத்தி வந்தார்கள். காலநிலைக்கு ஏற்ப சூட்டைத் தாங்கிக் கொள்வதற்கு வசதியாக காட்டன் துணியினால் செய்யப்பட்ட எளிமையான துணியை குழந்தைகளுக்கு பயன்படுத்தி வந்தார்கள்.

பள்ளிக்கூடங்களுக்கு செல்லுகின்ற மாணவர்கள் தங்கள் பள்ளிக்கூட சீருடையான காக்கி நிற குறு கால்சட்டையும் வெள்ளை சட்டையும் அணிந்தனர். மற்று நிகழ்வுகளுக்கு விதவிதமான நிறங்களிலான கால்சட்டைகளையும் சட்டைகளையும் பயன்படுத்தி வந்தனர். பள்ளிக்கூட மாணவர்களின் கால் சட்டை என்பது நீளமான கால் சட்டை இல்லை. கால் முட்டு வரையிலுமே காணப்பட்டது. பள்ளிக்கூட பருவ வயதில் இத்தகைய நிக்கர் எனப்படும் ஆடையைத் தான் அணிந்து வந்தனர். கல்லூரி பருவத்திற்கு நுழைந்தவுடன் நீளமான கால்சட்டையை அணிகிறார்கள்.

மேலும் குளிர்காலத்தில் கை நீளமான சட்டையை பயன்படுத்துகிறார்கள். கோடைக்காலத்தில் நீளம் குறைந்த கையளவு கொண்ட சட்டையை பயன்படுத்துகிறார்கள். தற்போது ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கு விதவிதமான சீருடைகள் வழங்கப்படுவதை முன்னிட்டு வித்தியாசமான நிறங்களிலான சீருடைகளை இளைஞர்கள் அணிந்து வருகின்றனர்.

அலுவலகங்களில் பணிபுரிவோர் நீண்ட கால்சட்டையும் பயன்படுத்துகின்றார்கள். சட்டையும்

www.malankaralibrary.com

பயன்படுத்துகின்றார்கள். ஆனால் சாதாரண வேலைக்கு செல்லக்கூடிய நபர்கள் குறிப்பாக கூலித்தொழில், பயிர்த்தொழில் செய்யக்கூடிய நபர்கள் அவர்களது தொழிவுக்காக வெள்ளை வேட்டிக்கு பதிலாக சாரம் அது கைலி எனப்படும் வண்ண வேட்டியை இடுப்பில் கட்டிக் கொண்டு தங்களுடைய பணிகளை செய்கின்றார்கள். கட்டிட பணிபுரிபவர்களும் பயிர்த் தொழில் செய்பவர்களும் வியாபாரம் செய்பவர்களும் முக்கியமாக இத்தகைய ஒரு உடையை தான் அணிந்து வருகிறார்கள்.

பெண்களின் உடைகள் முற்றிலும் மாற்றல் ஆனவை. குழந்தைப்பருவத்தில் உடுப்பு எனப்படும் சிற்றாடையை பயன்படுத்துவர். பள்ளிக்கூட வயதை அடைந்தவுடன் கால் முட்டு வரையுள்ல பாவாடை மற்றும் மேல்சட்டை பயன்படுத்த ஆரம்பிக்கின்றனர். பருவ வயதை அடைந்தவுடன் நாளமாந பாவாடையை பயன்படுத்துவர். மேல்நிலை கல்வி படிக்க ஆரம்பித்தவுடன் நீளப்பாவாடையுடன் அரை சாரி என்னும் ஒரு ஆடை வடிவமைப்பை பயன்படுத்துகிறார்கள். தற்போது இந்த ஆடை வடிவமைப்பு அதிகமாக பயன்படுத்துவது இல்லை. திருமண வயது நெருங்கும் வரையிலும் இந்த அரை சாரி ஆடை வடிவமைப்பையே பயன்படுத்தி வந்தார்கள். திருமண வயது அடைந்தவுடன் முழு புடவையை கட்ட ஆரம்பிக்கிறார்கள். தொடர்ந்து தங்களுடைய பணிகளுக்கும் வீட்டு வேலைகளுக்கும் இத்தகைய புடவையை மட்டுமே பயன்படுத்துகிறார்கள்.

ஆனால் தற்போது இந்நிலை முற்றிலுமாக மாறி திருமணம் போன்ற முக்கிய நிகழ்வுகளுக்கு மட்டுமே புடவை கட்டும் வழக்கமும் மற்று நிகழ்வுகளுக்கு எளிதில் அணிவதற்கு வசதியாகவும் பயணம் செய்வதற்கு வசதியாக பல்வேறு பணிகளை செய்வதற்கு வசதியாகவும் சுடிதார் எனப்படும் வடநாட்டு கலாச்சார உடையை அதிகமாக பெண்களுள் எல்லா வயதினரும் பயன்படுத்தி வருகிறார்கள்.

www.malankaralibrary.com

கிறிஸ்துமஸ் உயிர்ப்பு மற்றும் வீடுகளில் நடைபெறும் திருமணம் நிகழ்வுகளுக்கு புதிய துணிகள் வாங்கி தைத்து போடும் வழக்கம் இருந்து வந்தது ஆனால் தற்போது விதவிதமான வடிவமைப்பில் ரெடிமேட் ஆடைகள் மலிவாக சந்தைகளில் கிடைப்பதன் காரணத்தினால் தற்போது இத்தகைய விழாக்களின்போது விதவிதமான ஆடைகளை வாங்கி பயன்படுத்தி வருகிறார்கள்.

## 10. மருத்துவக்கூடங்கள்

குமார் கிளினிக் என்ற பெயரில் பல ஆண்டுகளாக நடைக்காவு சந்திப்பில் ஒரு கிளினிக் செயல்பட்டு வருகிறது. மக்களின் உடல் சார்ந்த நோய்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கக் கூடிய விதத்தில் கிளினிக் செயல்பட்டு வருகிறது. டாக்டர் சம்பத் அவர்கள் இந்த கிளினிக்கில் அயராது செயல்பட்டு ஏழை மக்களின் கண்ணீரை துடைத்து வருகிறார். மேலும் பதினைந்துக்கும் மேற்பட்ட படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைந்திருந்தது. ஆனால் நோயாளிகளின் வருகையின் குறைவு காரணமாக பின்னர் மூடப்பட்டது. ஆனால் தற்போது நோயாளிகள் நித்திரவிளையில் உள்ள மருத்துவமனைகளை பெரிதும் பயன்படுத்தி வருகின்றனர்.

மேலும் நாகர்கோவிலில் அமைந்திருக்கக் கூடிய ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மக்கள் அதிகமாக செல்கிறார்கள். உயர் சிகிச்சைக்காக திருவனந்தபுரத்தில் அமைந்திருக்கக் கூடிய மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலும் திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள கிம்ஸ் மற்றும் அனந்தபுரி போன்ற உயர்தர மருத்துவமனைகளையும் மக்கள் தங்களுடைய மேல் சிகிச்சைக்காக நாடுகின்றனர்.

நடைக்காவில் ஏராளமான வைத்தியசாலைகள் செயல்பட்டு வந்தன. பல புகழ் பெற்ற வைத்தியர்கள்

www.malankaralibrary.com

மக்களுக்கு மருத்துவம் பார்த்து வந்தார்கள். பக்கத்து ஊர்களிலிருந்தும் நடைக்காவில் வைத்தியரை சந்திப்பதற்காக வந்ததாக முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள். மேலும் நடைக்காவில் விஷக்கடி வைத்தியரின் சிகிச்சை மிகவும் பெயர் பெற்றது. பாம்பு தேள் போன்ற கொடிய விஷம் கொண்ட சிகிச்சைக்காக இங்கு மக்கள் அழைத்து வரப்படுகிறார்கள்.

மேலும் மக்கள் அத்தியாவசியமாக எப்போதும் சிறு நோய்களுக்காக மருந்துகள் வாங்குவதற்காக எஸ்ஆர் மெடிக்கல்ஸ் ஒன்று நடைக்காவு சந்திப்பிலேயே செயல்பட்டு வந்தது. ஏழை மக்களுக்கு மருத்துவமனைகளுக்குச் செல்லத் தெரியாத மக்களுக்கு இது மிகப் பெரும் ஆறுதலாக உறுதுணையாக இருந்து வந்தது. தற்போது அப்போலோ மெடிக்கல்ஸ் என்ற பெயரில் விரிவாக்கம் செய்யப்பட்ட விரிவான மருந்தகம் நடைக்காவில் செயல்பட்டு வருகிறது.

## 11. வீட்டுச் சிகிச்சைகள்

சாதாரணமாக காய்ச்சல் வருகிறது என்றால் வீட்டிலேயே நோயாளியை படுக்க வைப்பார்கள். அவர்களுக்கு சூடான உணவுப் பொருட்களை வழங்குவார்கள். குறிப்பாக டீ வழங்குவார்கள். மேலும் அவர்களுக்கு ஜலதோஷம் தொண்டை வேதனை சளி போன்ற பிரச்சினைகள் இருக்கிறது என்றால் சுக்கு போட்ட டீ தயாரித்து கொடுப்பார்கள். மேலும் காய்ச்சல் அதிகமாக இருக்கிறது என்றால் படுக்கவைத்து நெற்றியில் தண்ணீரில் நனைந்த ஒரு துணியை போட்டு வைப்பார்கள். மேலும் காய்ச்சல் நோயாளிகளுக்கு சிறப்பு உணவாக கஞ்சி தயாரித்து வழங்குவர். பிஸ்கட் போன்ற உணவுப் பொருட்கள் நோயாளிகளுக்காக முன்னர் பயன்படுத்தப்பட்டு வந்தது. மீண்டும் காய்ச்சல் முற்றிய நிலையில் மட்டுமே என்றால் மருத்துவமனைக்கு செல்கிறார்கள். மருத்துவமனைக்கு சென்று ஊசி

www.malankaralibrary.com

செலுத்துகின்ற போது ஓரிரு நாள்களில் காய்ச்சலின் தீவிரமானது குறைந்து பூரண குணடைந்து விடுகிறது.

விளையாடுகின்ற போதும் வேலைகள் செய்கின்றபோதும் கைகளிலும் கால்களிலும் மற்று உடல் பகுதிகளிலும் பெரிய முறிவு மற்றும் காயங்கள் ஏற்படுகிறது எனில் உடனடியாக முதலுதவி செய்த பின்னர் அவரை வைத்தியசாலைக்கு தூக்கி செல்கிறார்கள். வைத்தியர் முறிவு ஏற்பட்டுள்ள பகுதியை சீர்செய்து துணியால் கட்டி வைத்து அதன் மேல் எண்ணெய் தடவி விடுவார். ஒரு சில நாட்களுக்குப் பின்னர் குணமடைந்து விடுகிறது.

மக்கள் பல நேரங்களிலும் செருப்பு பயன்படுத்தாததால் பாதைகளில் உள்ள கற்கள் காலில் பட்டு காயம் ஏற்படுகிறது. வழிகளில் காணப்படக்கூடிய இரும்பு கண்ணாடிகள் போன்றவை கால்களில் பட்டும் காயங்கள் ஏற்படுகிறது. காயங்கள் ஏற்படுகிறது என்றால் வீடுகளில் நன்றாக அந்த காயத்தை கழுவிச் சுத்தம் செய்து அதன் மேல் பலவிதமான பச்சிலைகளை மருந்தாக பயன்படுத்தி வந்தனர். மேலும் உள்ளியை அரைத்து அதனையும் காயத்துக்கு மருந்தாக பயன்படுத்தினர். ஒரு சில நாட்களில் அதுவும் பூரணமாக குணம் அடைந்து விடுகிறது.

அம்மை நோய் முற்காலங்களில் அதிகமாக பாதிக்கப்பட்டு வந்தது. அம்மை நோய் பாதிக்கப்பட்ட நபர்களை தனிமைப்படுத்தி அவர்களை தனி அறையில் அல்லது தனியாக ஒரு இடத்தில் அவர்களை படுக்க வைப்பார்கள். வேப்பிலைகளை அவர்களை சுற்றி வைப்பர். அவர்களுக்கு தேவையான உணவுகளை தனியாக வழங்குவார்கள். அவர்கள் சாப்பிடுவதற்கு நல்ல சத்துமிகுந்த இளநீர் போன்ற உணவுப் பொருட்களை வழங்குவார்கள்.

www.malankaralibrary.com

செங்கண் எந்த ஒரு நோயானது அதிகமான வெப்ப காலங்களில் வருகிறது இந்த நாள்களில் கண்கள் ஆனது மிகவும் சிவந்து காணப்படுகிறது. இது பிறருக்கு பரவக் கூடிய நோய் ஆனதால் இந்த நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டு வீடுகளிலேயே சிகிச்சை வழங்குவர்.

கொதிக்குப் பார்த்தல்: வயிற்றில் செரிமான பிரச்சனைகள் காரணமாக வயிற்றுவலி ஏற்படுவது சகஜம். என்றால் உடனடியாக கொதிக்கு பார்த்தல் நிகழ்வினை நடத்துவார்கள். அதாவது ஒரு பாத்திரத்தில் தண்ணீரை வைத்திருப்பார்கள். மேலும் 3 துண்டு துணிகளை அல்லது ரிப்பனை ஒன்றாக எடுப்பார்கள். இந்த மூன்று துண்டுகளையும் வயிற்றின் மேல் நன்றாக தடவுவார்கள். பின்னர் துணிகளை விளக்கில் எரிய வைத்து அதனை ஒரு செம்பு எனப்படும் குவளையில் போடுவார்கள். முக்கால் பகுதி துணி எரிந்தவுடன் சொம்பினை அப்படியே தண்ணீர் வைத்திருக்கும் பாத்திரத்தில் தலைகீழாக வைப்பார்கள். தண்ணீர் அனைத்தும் சொம்பினுள் உறிஞ்சப்படுகிறது என்றால் கொதி அல்லது வயிற்றுப்பிரச்சனை தீர்ந்து விட்டது என்பது பொருள்.

கம்பயரிடுதல்: கம்பயரிடுதல் அல்லது கண் வைத்தல் என்பது மக்கள் வீட்டிலிருந்து வெளியே போய் திரும்பி வந்த உடனடியாக ஒரு சில நபர்கள் ஏதோ அவர்களை பார்த்து நம்மை பார்த்து ஏக்கம் பெற்றிருப்பார்கள் என்று கூறி அந்த பொறைமை எனப்படும் ஏக்கத் தன்மை மாறுவதற்காக பின்வருமாறு செய்கிறார்கள். ஒரு காகிதத்தில் உப்பு, கடுகு, மிளகாய் போன்றவற்றை எடுத்து மடிக்கின்றனர். இவ்வாறு பொதிந்தவற்றை மூன்று முறை தலையிலும் உடல் பகுதிகளிலும் சுழற்றுகிறார்கள். பின்னர் அடுப்பினுள் போடுகிறார்கள். அடுப்பில் போடக்கூடிய நேரத்தில் இந்த

www.malankaralibrary.com

கடுகு பொட்டி சத்தம் வெளியே கேட்கிறது என்றால் எத்தீங்கும் நெருங்காது என்பது பொருள்.

மேலும் நடந்து செல்லக்கூடிய வழியிலேயே பூனையைக் கண்டால் வழி மாறிச் செல்வார்கள். அவ்வாறே ஒரு சில விலங்குகளை கண்டால் வழி மாறிச் செல்வார்கள். ஒரு சில காரியங்கள் பேசுகின்ற போது காகம் கரைகிறது என்றால் அது சட்டத்திற்கு எதிரானது என்றும் நல்ல சகுனம் அல்ல என்றும் கூறுகிறார்கள். பல்லியின் சத்தம் கேட்டால் நாம் பேசுக்கொண்டிருக்கும் நிகழ்வுகளை எதிர்மறையாக அமையும் என நம்பி இருந்தார்கள்.

குழந்தைகள் பள்ளிக்கு செல்வதற்கு முன்னால் பள்ளியில் அடி கிடைக்காமல் இருப்பதற்காக ஒருசில சாத்திரங்களை செய்வார்கள். படிப்பு நன்றாக வர வேண்டுமென்பதற்காக மயில் தோகை அல்லது ஒருசில இலைகளை அல்லது தெய்வங்களின் படங்களை புத்தகத்திற்குள் வைத்திருப்பார்கள்.

வரும் வழியில் வெள்ளை நிற காரைக் கண்டால் வீட்டில் விருந்து வரும். நல்ல இனிய தின்பணடங்கள் கிடைக்கும் என்பதும் ஐதீகமாக அமைந்திருந்தன.

மந்திரவாதங்களும் பில்லிசூனியங்களும் பல இடங்களில் நடத்தப்பட்டு வந்தன. தங்களுடைய நோய் மாறுவதற்காகவும் பிறருக்கு துன்பம் வருவித்து தங்களுடைய துன்பத்தை மாற்றுவதற்காகவும் மந்திரவாதங்கள் நடத்தப்பட்டன.

## 12. நெற்பயிரிடுதல்

கிராமத்தின் உட்பகுதியில் அமைந்திருக்கக் கூடிய வயல்வெளிப் பகுதி மிகவும் அமைதியான பச்சைபசேலென விரிந்து பரந்திருந்த ஏராளமான வயல் வெளிப்பகுதிகளாக முற்காலங்களில் அமைந்திருந்தன.

www.malankaralibrary.com

பல நபர்கள் இந்த வயல்களில் நெல்லைப் பயிரிட்டு அதன்வழியாக நல்ல விளைச்சலை பெற்று மகிழ்ந்து வாழ்ந்து வந்தார்கள்.

மழைக்காலம் ஆரம்பித்த உடனடியாக வயலை நன்றாக உழுது பக்குவப்படுத்துகிறார்கள். இவ்வாறு பக்குவப்படுத்தும் போது இயற்கை உரங்களான மாட்டுச்சாணம், சாம்பல் மற்றும் மரக்கிளைகளை பயன்படுத்துகிறார்கள். நிலத்தை உழுது சீர்செய்வதற்காக காளைகளை அல்லது மாடுகளை பயன்படுத்தி வந்தார்கள். நிலத்தை நன்றாகப் பக்குவப்படுத்திய பின்னர் அதன் ஒரு மூலையில் வயலில் நட வேண்டிய நெல்களை விதைக்கிறார்கள். இந்த நெல் விதைகள் ஒரு சில நாட்களிலேயே வளர்ந்து மேல் நோக்கி வருகிறது. இவ்வாறு வளர்ந்து வரக்கூடிய இந்த செடிகளை நாற்று என்று கூறுகிறார்கள். இதனை பிடுங்கி எடுத்து பின்னர் வயலில் வரிசையாக மூன்று அல்லது நான்கு செடிகளை ஒன்றாக சேர்த்து வரிசையாக நடுவார்கள். நெல் நாற்று நட்ட பின்னர் எப்போதும் தண்ணீரானது வயலில் தேங்கி நிற்க வேண்டும். இந்த நாற்றுகள் வளர்ந்து கதிர்களை விட்டு விளையக்கூடிய நாள் வரையிலும் தண்ணீர் நிற்க வேண்டும். முதிர்ந்த பின்னர் அவற்றை கீழ்ப்பகுதியில் இருந்து அறுத்து அதனை வீடுகளுக்கு எடுத்துச் செல்கிறார்கள். வீடுகளில் வைத்து நெற்கதிர்களையும் வைக்கோலையும் தரம் பிரிக்கிறார்கள். நெல்லை தனியாக தரம்பிரித்து உலர்த்தி உணவுக்காக சேமித்து வைக்கிறார்கள். வைக்கோலை பல நாட்கள் நன்றாக உலர செய்து அவற்றை ஏதேனும் ஒரு மரத்தில் சுற்றி கூட்டி வைக்கின்றார்கள். இவ்வாறு கூட்டி வைப்பதை வைக்கோல் போர் என்று கூறுகிறார்கள். அவற்றிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மாடுகளுக்கு உணவாக இதனை வழங்குகிறார்கள்.

முன்னர் நெய்யார் இடது கரை சானல் வழியாக விவசாயத்திற்கு தேவையான தண்ணீர்

www.malankaralibrary.com

கிடைக்கப்பெற்றது. பின்னர் தண்ணீர் கிடைக்கப் பெறாததால் நெல் விவசாயம் நிறுத்தப்பட்டு மக்கள் வயல்களில் வாழை மற்றும் மரவள்ளிக்கிழங்குகளை நட்டனர். அதற்கும் போதிய தண்ணீர் கிடைக்காததால் தென்னை மரங்களை நட்டனர்.

## 13. பனை மரத்தொழில்கள்

பனை மரமேறும் தொழிலானது மிக முக்கியமான தொழிலாக முற்காலங்களில் இருந்து வந்தது. பனைமரம் ஏறுகின்ற தொழில் செய்பவர் பனையேறி என அழைக்கப்பட்டார். பனையேறி பனைமரத்தில் மேலேறி பனைமரத்தின் பூக்களை சேர்த்துக் கட்டி அதன் நுனியை சற்று வெட்டிய பின்னர் கலையம் எனப்படும் ஒரு மண் பானையின் உள்ளே விடுவார். இந்த பூக்களின் நுனியிலிருந்து சுரக்கக் கூடிய திரவ கலையத்திற்குள் சேமிக்கப்படுகிறது. பதநீர் அல்லது அக்கானி எனப்படும் இத்திரவத்தை அக்கானிக் குடுவையில் சேமித்து கீழே பானையில் சேகரிப்பர். இவ்வாறு வடிக்கப்பட்ட அக்கானியை மக்கள் தங்களுடைய வீடுகளில் இதற்கென தனிப்பட்ட முறையில் செவ்வக வடிவில் வடிவமைக்கப்பட்ட இரும்பினால் செய்யப்பட்ட சற்று பெரிய பாத்திரத்தில் ஊற்றி காய்ச்சுகிறார்கள். இவ்வாறு காய்ச்சுகின்ற போது மரவள்ளி கிழங்கையும் உள்ளே விட்டு வேக வைப்பர். வித்தியாசமான தனிச்சுவை கொண்ட இந்த சுவையான கிழங்கை குழந்தைகள் மிகவும் விரும்பி சாப்பிடுவர். மேலும் இந்த அக்கானியை கொதிக்க வைக்கின்ற போது சற்று இறுக்கமான திரவ நிலையாக உருமாற்றம் அடைகிறது. பதனி எனப்படும் இதனையும் குழந்தைகள் பலாமரத்தின் இலையில் வைத்து விரும்பி உண்பர். மேலும் இதனை காய்ச்சி வடிகட்டி அச்சுக்களில் வார்த்து கருப்பட்டி எனப்படும் சுவைமிகுந்த ஒரு பொருளை உருவாக்குகிறார்கள். இந்த கருப்பட்டி ஆரோக்கியத்திற்கு மிகவும் நன்றானது ஆகும். பல்வேறு விதமான தின்பண்டங்களை

www.malankaralibrary.com

உருவாக்குவதற்கும் பயன்படுத்தப்பட்டு வந்தது. அதிகமாக உருவாக்கப்பட்ட இந்த கருப்பட்டிகள் சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டு வந்தன. ஒரு குடும்பத்தில் ஒருவர் பனையேறும் தொழில் மேற்கொள்கிறார் என்றால் பண்டைய காலத்தில் அவர் அந்த சமூகத்திலேயே பெரியவராக என கருதப்பட்டார். மேலும் பனைமரத்தின் ஓலைகளை சீவி வடிவமைத்து வீட்டு உபயோகப் பொருட்களாக பயன்படுத்தி வந்தனர். பாய், முறம், அருவட்டி மற்றும் குட்டை போன்றவைகளை மக்களே உருவாக்கி சந்தைகளில் விற்பனையும் செய்து வந்தனர்.

## 14. தென்னை மரத்தொழில்கள்

தென்னை மரத்தொழிலும் மிக முக்கியமான தொழிலாக அமைந்திருந்தது. பனையேறிகளே அதிகமாகவும் தென்னை மரங்களிலும் ஏறுபவர்களாக இருந்தனர். தென்னை மரத்திலிருந்து தேங்காய் வெட்டி எடுக்கப்பட்டு தேங்காயின் தொண்டு என்ற மேல் பகுதியை மாற்றி தேங்காய் மட்டுமாக விற்பனை செய்து வந்தார்கள். தொண்டு எனப்படும் தேங்காயின் மேல் பகுதியை பலநாட்கள் தண்ணீரில் ஊற வைத்து அதிலிருந்து கயிறு தயாரிக்கவும் செய்துவந்தார்கள். மேலும் இந்த தொண்டினை தென்னை மரத்திற்கு உரமாகவும் பயன்படுத்தி வந்தார்கள். தென்னைமர ஓலைகளை வெட்டி அதனை சரியான முறையில் முடைந்து வீடுகளில் மேற்கூரைக்காக பயன்படுத்தி வந்தார்கள். தென்னங்கீற்று முடைதல் தொழிலையும் ஏராளமான நபர்கள் விரும்பி செய்து வந்தார்கள். திருமண நிகழ்வுக்காக திருமண அரங்கில் கட்டப்படுவதற்கு முன்னால் வீடுகளுக்கு முன்னாலேயே திருமண வைபவங்களுக்கு பந்தல் போடக்கூடிய வழக்கம் அமைந்திருந்தது. முற்காலங்களில் இந்த பந்தல் தென்னைமர ஓலைகளால் வடிவமைக்கப்பட்டு வந்தது. மேலும் முற்காலங்களில் அதிகமாக குடிசை வீடுகளும்

www.malankaralibrary.com

ஓட்டு வீடுகளும் காணப்பட்டன. குடிசை வீடுகள் அனைத்தும் தென்னங்கீற்றுகளாலேயே அமைக்கப்பட்டன. மேலும் தேங்காய்களை உலர்த்தி அதிலிருந்து எண்ணெய் பிழிந்து எடுக்கக்கூடிய தொழிலையும் சிலர் செய்து வந்தார்கள்.

## 15. மரச்சீனி பயிரிடுதல்

மரவள்ளிக்கிழங்கை மரச்சீனி என்பர். நல்ல மழை பொழிந்த பின்னர் நிலத்தை உழுது சீர்செய்து பதப்படுத்தி தயார்படுத்துகிறார்கள். பின்னர் சாணகம் மற்றும் சாம்பல் போன்ற இயற்கை உரங்களை பயன்படுத்தி மரச்சீனி நடுவதற்கு வசதியாக மண்ணைக் கூட்டி குழிகளை அமைக்கிறார்கள். இவ்வாறு கூட்டப்பட்ட மண்ணின் மேற்பகுதியில் மரச்சீனிக் கம்பை நடுகிறார்கள். இந்த மரச்சீனிக்கு ஊடுபயிராக சிறுபயறு, பெரும்பயறு, உழுந்து மற்றும் காணம் போன்றவற்றையும் நடுகிறார்கள்.

மரச்சீனி வளர்ந்து மேல் நோக்கி வந்த பின்னர் அதனுடைய இலைகள் பழுத்து மஞ்சள் நிறமடையும். அவற்றை ஆடு மாடுகளுக்கு உணவாக கொடுக்கிறார்கள். விளைச்சலின் போது குழியின் சுற்றிலுமுள்ள மண்ணை மாற்றிய பின்னர் கம்பை பிடித்து இழுத்து மரச்சீனி கிழங்குகளை மேல் எடுக்கிறார்கள். இந்த கிழங்கின் மேல்தோலை மாற்றி துண்டு துண்டாக நறுக்கி பின்னர் உலர வைக்கிறார்கள். ஒரே நாளில் விடிய விடிய அமர்ந்து இப்பணியினை செய்து மகிழ்கின்றனர். பின்னர் ஏறக்குறைய நான்கு முதல் ஆறு நாட்கள் நல்ல சூரிய ஒளியில் உலர வைக்கிறார்கள். நன்றாக உலர்ந்த பின்னர் உலர்கிழங்கினை பத்தாயம் எனப்படும் மரத்தினால் செய்யப்பட்ட மிகப்பெரிய ஒரு தானியக்கிடங்கில் சேமித்து வைப்பர். தேவைக்கேற்ப இந்த கிழங்கினை சமையலுக்கு பலவிதங்களில் பயன்படுத்துகிறார்கள். கிழங்கை வேகவைத்து மீன்கறியோடு சேர்த்து

www.malankaralibrary.com

சாப்பிடுகிறார்கள். இந்த கிழங்கினை பொடியாக்கி கிழங்கு புட்டு செய்து சாப்பிடுகிறார்கள். அதிகமாக உள்ளவற்றை சந்தைகளில் விற்பனையும் செய்கிறார்கள்.

16. வெற்றிலைக்கொடி பயிரிடுதல்

வெற்றிலைக் கொடி அமைத்தலும் மிக முக்கியமான தொழிலாக அமைந்திருந்தது. இந்த வெற்றிலைகள் திருமண நிகழ்வுகளிலும் மற்றும் வீட்டு வைபவ நிகழ்வுகளில் அதிகமாக சாஸ்திரங்களோடு சேர்த்து பயன்படுத்தி வந்தனர். முற்கால முதியவர்கள் வெற்றிலையை சுண்ணாம்பு, பாக்கு மற்றும் புகையிலை போன்றவற்றை சேர்த்து அதனை வாய்க்கு உள்ளே போட்டு மென்று சிவப்பு நிறம் வந்த பின்னர் மீதி இருக்கக்கூடியவற்றை அவர்கள் வெளியே துப்புகிறார்கள். இந்த வெற்றிலைக் கொடிகள் நடுகின்ற போது இதற்கும் ஊடுபயிராக முருங்கை மற்றும் முருக்கு மரங்களையும் நல்லமிளகையும் பயிர் செய்கிறார்கள்.

17. புளியங்காய்

புளிய மரங்கள் ஏராளமாக காணப்பட்டன. இவை பல்வேறு மக்களுக்கு வாழ்வாதாரமாகவும் அமைந்திருந்தன. புளிய மரத்தில் இருந்து புளிகளை சேகரிக்கும் செயலுக்கு புளி உலுக்குதல் எனப் பெயர். இது கடினமான தண்டை கொண்டிருப்பதால் அதனுடைய கொம்பைப் பிடித்து புளி உலுக்குதல் பெரும் சவாலாகவே அமைந்திருந்தது. கீழே விழுகின்ற புளிகளை சேகரித்து வீடுகளில் அதனுடைய மேல் தோலையும் காம்பையும் அகற்றி விட்டு உள்ளே இருக்கக்கூடிய புளியை தனியாக எடுத்து உலர வைப்பார்கள். நன்கு உலர்ந்த பின்னர் புளிக்குத்தி என்னும் கருவியால் புளியங்கொட்டையை மாற்றம் செய்கிறார்கள். பின்னர் மீண்டும் உலரச் செய்து சற்று உப்பு சேர்த்து பானைகளில் சேமித்து வைப்பார்கள். புளியங்கொட்டையை சந்தைகளில் விற்பனை செய்கிறார்கள். மேலும் ஆடு மாடுகளுக்கு

www.malankaralibrary.com

புளியங்கொட்டையை வேகவைத்து உணவாக வழங்குகிறார்கள். மேலும் இந்த புளியங்கொட்டையை அடுப்பில் போட்டு வறுத்து வலுவான பற்களை உடையோர் அதனை சாப்பிடவும் செய்கின்றனர்.

## 18. இயற்கை வளம்

நடைக்காவு பகுதி முழுவதுமே தரிசு நிலங்கள் இல்லாமல் மரங்களால் சூழப்பட்டு மிகவும் பச்சைக் கம்பளம் விரித்தது போன்று மிகவும் அழகாக காட்சியளிக்கிறது. எங்கும் அதிகமாக தென்னை மரங்கள் காணப்படுகின்றன. அதைப் போன்று ஏராளமான பனைமரங்களும் இவ்வூரில் அதிகமாக காணப்பட்டன. ஆனால் இந்த பனை மரங்கள் பிற்காலங்களில் பனை மரம் ஏறுவதற்கு தொழிலாளர்கள் குறைவானதாலும் இத்தொழில் மிகவும் கடினமான தொழிலாக இருந்ததாலும் பனைமரங்கள் பயன்பாடு இல்லாமல் நின்றன. பின்னர் அனைத்து பனைமரங்களும் வெட்டப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. தற்போது எங்குமே பனை மரம் இல்லாத ஒரு ஊராக உள்ளது.

நாளடைவில் இரப்பர் விலை உயர்ந்த போது பலரும் தங்கள் விளைநிலங்களை இரப்பர் மரங்களை தங்கள் வாழ்வாதாரத்திற்காக பயன்படுத்தினர். இரப்பர் மரத்தின் பாலை வடித்து அதனை பதப்படுத்தி இரப்பர் ஷீட் வடிவத்தில் விற்பனை செய்து வந்தனர்.

## 19. அண்டி ஆபீஸ்

முற்காலங்களில் ஒரு சில ஆண்டுகளில் பள்ளிப்படிப்பை முடிக்கின்ற இளம்பெண்களுக்கான மற்றும் வளர்ந்த பெண்களுக்கான ஒரு முக்கிய பணித்தளம் தான் அண்டி ஆபீஸ். கொல்லாமாவு என்னும் மரத்திலிருந்து விளையும் கொல்லாம் பழத்தோடு இணைந்த சிறுநீரக வடிவிலான விதைப்பகுதியையே கொல்லாண்டி, கசுவண்டி என அழைக்கின்றனர்.

www.malankaralibrary.com

இவ்வூரில் இதனை அண்டி எனவே குறிப்பிடுகின்றனர். இதனை முந்திரிப் பருப்பு என்பர்.

நடைக்காவை சுற்றிய பகுதிகளிலும் முற்காலங்களில் ஏராளமான இத்தகைய அண்டி ஆபீஸ்கள் செயல்பட்டு வந்தன. ஆயிரக்கணக்கான பெண்கள் இந்த தொழிற்கூடங்களில் தங்கள் பணிகளை செய்து சிறு வருமானத்தை பெற்றுக் கொண்டிருந்தனர்.

மொத்தமாக வாங்கப்படுகின்ற கசுவண்டியை தீயில் போட்டு சுட்டு அதனை உடைத்து உள்ளே இருக்கக்கூடிய அண்டிப் பருப்பை பிரித்தெடுத்து அதனை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் தயாரிக்கின்ற ஒரு தொழில் கூடமே அண்டி ஆபீஸ். இளம்பெண்கள் அதிகமானவர்கள் அதிகாலையிலேயே சென்று மாலை வரையிலும் தங்களுடைய பணிகளை செவ்வனே அவர்கள் செய்து வந்தார்கள்.

ஆனால் தற்போது பெண்களின் கல்வி நிலை மேம்படுத்தப்பட்ட போது இளம்பெண்கள் இப்பணிக் கூடத்திற்கு செல்லும் நிலை குறைந்து விட்டது. எனினும் பள்ளிப் படிப்பை முடித்து ஊதியம் பெறக்கூடிய ஒரு தொழிலாகவே இன்றும் பல பெண்கள் பணி புரிந்து வருகின்றார்கள்.

நடைக்காவில் இடவார் எனப்படும் இடத்தில் இத்தகைய ஒரு தொழில் கூடம் தற்போது செயல்பட்டு வருகிறது. ஆனால் சுற்றிய பகுதிகளில் அமைந்துள்ள இத்தகைய பல்வேறு தொழிற்கூடங்கள் குறைவான பணியாளர்களின் எண்ணிக்கையை முன்னிட்டு மூடப்பட்டன.

இன்று இவர்களுக்கு வாகன வசதிகளை தொழிற்கூடங்கள் செய்து கொடுக்கின்றன. அரசு ஊழியர்களை போன்றே ஓய்வூதியத் திட்டங்கள் பல்வேறு மற்றும் சலுகைகளை இவர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

www.malankaralibrary.com

ஆயிரக்கணக்கான பெண்கள் பணி செய்த நிலை மாறி தற்போது ஏறக்குறைய ஒரு சில நூறு நபர்கள் மட்டுமே பணி புரிய கூடிய நிலைக்கு இத்தொழிற்கூடங்களுக்கு ஏற்பட்டுவிட்டன.

## 20. கட்டிட வேலை

விவசாயத்தைப் போன்றே கட்டிட வேலை செய்யக்கூடிய நபர்களும் ஏராளமாக உள்ளனர். தினந்தோறும் காங்கிரீட் செய்யும் பணியாளர்களின் முக்கிய சந்திப்பாக நடைக்காவு திகழ்கிறது. காலை நேரங்களில் கட்டிடப் பணி செய்யக்கூடிய நபர்கள் நடைக்காவு சந்திப்பிலேயே வந்து ஒன்று கூடுவார்கள்.

இந்த சந்திப்பில் இருந்து தான் ஒவ்வொரு பகுதியை நோக்கி எந்தெந்த இடத்திற்கு செல்ல வேண்டுமென்று அவர்கள் நகர்ந்தார்கள். ஒருவேளை அவர்களுக்கான வாகன வசதி வரை செய்யப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக கட்டிடத் தொழில் செய்யக்கூடிய நபர்களுக்கு முக்கியமான ஒரு சந்திப்பாக இந்த நடைக்காவு சந்திப்பு அமைந்துள்ளது. கட்டிடப் பணிகளுக்கான உபகரணங்களும் வாடகைக்கு பெற்றுக்கொள்ளும் வசதி இவ்வூரில் உள்ளது.

இவ்வூரைச் சார்ந்த மக்கள் பலர் தற்போது வெளியூர்களிலும் அலுவலகங்களிலும் பணிபுரிபவர்களாக இருந்தாலும் முற்காலங்களில் அதிகமான நபர்கள் விவசாயத்தையே அதிகமாக நம்பியிருந்தார்கள். முற்காலங்களில் ஒவ்வொரு குலத்திற்கேற்ப அவர்கள் செய்ய வேண்டிய தொழிலை வகுத்து வைத்திருந்தார்கள். குறிப்பிட்ட குலத்தைச் சார்ந்த மக்கள் அந்தந்த தொழிலை மட்டுமே செய்து வந்தனர். ஆனால் நாட்கள் கடந்து போகவே, குலங்களின் முக்கியத்துவம் அழிந்துவிட்டது. அனைத்து மக்களும் அனைத்து விதமான வேலைகளையும் செய்வதற்கு

www.malankaralibrary.com

தொடங்கி ஒருங்கிணைந்த சமூகத்தை வளர்த்து வருகிறார்கள்.

## 21. ஸ்ரீமகாவிஷ்ணு தேவாலயம்

இந்து மதத்தினருக்கு முக்கிய ஆலயமாக சாத்தன்கோடு ஸ்ரீமகாவிஷ்ணு தேவாலயம் செயல்படுகிறது. இந்த தேவாலயம் சாத்தன்கோடு சந்திப்புக்கு மிக அருகாமையில் அமைந்துள்ளது. எல்லா நாள்களிலும் காலையிலும் மாலையிலும் மக்கள் வந்து இறைவனை வழிபடுவதற்கு இந்த ஆலயத்தை பயன்படுத்தி வருகிறார்கள். வருடம் தோறும் 10 நாட்கள் திருவிழா நாட்களை வெகுவிமரிசையாக கொண்டாடுவார்கள். பல்வேறு அலங்கார வளையங்கள் சாலையோரங்களில் அமைக்கப்பட்டன.

அப்போது நடத்தக்கூடிய உறியடி என்ற நிகழ்வானது பார்ப்பதற்கு மிகவும் அருமையாக அமைந்திருக்கும். இந்த உறியடி நடைபெறக்கூடிய நேரத்தில் ஏராளமான பள்ளிக்கூட மாணவர்கள் கூட இதனை பார்ப்பதற்காக செல்வது வழக்கமாக இருந்தது. ஒவ்வொரு நாளும் திருவிழா நாள்களில் மாலை நேரங்களில் சிறப்பு உரைகளும் சிறப்பு கலைநிகழ்ச்சிகளும் திரைப்படங்களும் காண்பிக்கப்பட்டன. ஏராளமான நபர்கள் இதனை கண்டுகளித்தனர். திருவிழாவின் ஒரு முக்கிய நாளில் ஊர்வலம் நடத்தப்பட்டது. இந்த ஊர்வலத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட யானைகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. பல்வேறு அலங்கார பொருட்களை சுமந்து வருவது திருவிழா பவனிக்கு அழகூட்டின. பால்குட பவனி மற்றும் தேவர்களை போன்று வேடமிட்டு நடக்கக்கூடிய நபர்களின் பவனி என பவனி முழுவதுமே கண்களுக்கு இன்பம் தரும் விதத்தில் அமைந்திருந்தன.

இந்த திருவிழா நாள்களில் சமய வகுப்பு மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுவதன்

www.malankaralibrary.com

வாயிலாக மாணவர்களின் பல்வேறு கலைத் திறமைகள் வெளிப்பட்டு வருகின்றன. இந்த ஆலயத்திற்கு முன்பகுதியில் ஆலயத்திற்கு கலையரங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆலயத்தில் இருந்து ஏராளமான நபர்கள் வருடந்தோறும் சபரிமலைக்கு விரதமிருந்து பூஜைகளை மேற்கொண்டு இந்த ஆலயத்தில் இருந்து பயணம் தொடங்குகிறார்கள். மேலும் பல சிறு இந்து ஆலயங்கள் ஆங்காகங்கே காணப்படுகின்றன,

22. சி எஸ் ஐ ஆலயம்

நடைக்காவு சந்திப்புக்கு மிக அருகில் சிஎஸ்ஐ ஆலயம் செயல்படுகிறது. வானளாவ உயர்ந்த ஆலயக் கோபுரத்தோடு காணப்படக்கூடிய இந்த சிஎஸ்ஐ தேவாலயம் நடைக்காவுக்கே பெருமை சேர்க்கிறது. ஏறக்குறைய 1915 ஆம் ஆண்டிலிருந்து இப்பகுதியை சேர்ந்த மக்கள் கிறிஸ்தவ மறையை பின்பற்ற ஆரம்பித்தனர். இவ்வாறாக 1925 ஆம் ஆண்டு முதல் நடைக்காவில் ஆலங்கோடு சிஎஸ்ஐ தேவாலயம் சொந்தமான நிலத்தில் ஓலைக்குடிசையில் தேவாலய வழிபாடுகள் நடத்தப்பட்டன. இந்த ஓலைக்குடிசை பின்னர் 193œஆம் ஆண்டில் ஒரு ஆலயமாக கட்டப்பட்டு, அர்ச்சிக்கப்பட்டது.

1947 ஆம் ஆண்டு முதல் பாஸ்டர் ஒருவர் தங்கி வாழ்ந்து மறைபணிகளுக்கு ஊக்கம் காட்டினார். தற்போது அமைந்திருக்கக் கூடிய பிரமாண்டமான ஆலய 1982 ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டு 1999 ஆம் ஆண்டில் ஆலயமாக அர்ச்சிக்கப்பட்டது. 2005ஆம் ஆண்டில் தான் தற்போது நாம் காணக்கூடிய ஆலயத்தின் கோபுரம் அமைக்கும் பணிகள் முடிந்து மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த ஆலய முற்காலங்களில் ஆலங்கோடு ஆலயம் என்று அழைக்கப்பட்டு வந்தாலும் நடைக்காவிலேயே அதிகமானவர்கள் வாழ்ந்து வந்தார்கள். மேலும் 2015 ஆம் ஆண்டில் தான் ஆலங்கோடு

www.malankaralibrary.com

என்ற பெயரை மாற்றி நடைக்காவு என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இந்த ஆலயத்தில் உள்ள அனைத்து நபர்களும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஒன்றுகூடி இறைவனை வழிபட்டு வருகிறார்கள். கிறிஸ்துமஸ் தினம் முதல் புத்தாண்டு தினம் வரையிலும் உள்ள ஏழு நாட்கள் இந்த ஆலயத்தில் திருவிழா போன்றே காணப்படுகின்றன. வண்ண விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டு நூற்றுக்கணக்கான நட்சத்திரங்களை தொங்கவிட்டு மிகவும் அழகாக கம்பீரமாக இந்த ஆலய காட்சியளிக்கிறது. அப்போது பல்வேறு இயக்கங்களுக்கான ஆண்டு விழாக்கள் நடைபெறுகின்றன. ஆண்டு விழாக்களின்போது பிள்ளைகளின் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. பல்வேறு விதமான கலைவடிவங்கள் நடத்தப்பட்டு பிள்ளைகளை கலைதிறமைகள் வெளிப்படுத்தப்படுகிறது.

23. கிறிஸ்தரசர் ஆலயம்

நடைக்காவு மலங்கரை கத்தோலிக்க ஆலய என்னும் சிற்றூரின் தென் எல்லைப் பகுதியில் அமைந்திருக்கிறது. இந்த ஆலயம் 1934ஆம் ஆண்டு சாத்தன்கோடு பகுதியில் பள்ளி கட்டிடத்தில் ஒன்றாக சேர்த்து ஆரம்பிக்கப்பட்டது. தற்போது அமைந்திருக்கக் கூடிய புனித அந்தோணியார் நடுநிலைப்பள்ளியில் ஆலயமாக அமைந்திருந்த தடயங்கள் இப்போதும் தெரிகின்றன. அந்த இடத்தில் தற்போது அந்தோணியார் குருசடி பழங்காலத்தில் அமைக்கப்பட்ட தொன்மை மாறாது பழமையின் சின்னமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தொடர்ந்து கிறிஸ்தவ மறையை பின்பற்றியவர்களின் எண்ணிக்கை கூடியதன் காரணமாகவும் பள்ளிக்கூடத்திலிருந்து கோயிலை

www.malankaralibrary.com

தனிப்படுத்தவும் திருச்சபையின் வழிநடத்துநர்கள் பெரியவிளை என்ற பகுதியில் நிலத்தை வாங்கி சாத்தன்கோடு பகுதியில் இருந்து பெரியவிளை என்ற பகுதிக்கு ஆலயத்தை மாற்றி அமைத்தார்கள். அவ்வாறே முதல் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு 1963இல் அர்ச்சிக்கப்பட்டது. தற்போது காணப்படக்கூடிய புது ஆலயம் 2004ஆம் ஆண்டு அர்ச்சிக்கப்பட்டது.

கிறிஸ்து அரசர் மலங்கரை கத்தோலிக்க ஆலயம் என்னும் பெயரைக் கொண்ட இந்த ஆலயத்தில் வருடம்தோறும் நவம்பர் மாதம் கடைசி வாரத்தில் ஏழு நாட்கள் அல்லது பத்து நாட்கள் திருவிழா நாட்களாக கொண்டாடப்படுகிறது. இந்த ஏழு நாட்களிலும் நற்செய்திக் கூட்டங்களும் பல்வேறு இயக்கங்களின் ஆண்டுவிழா கூட்டங்களும் நடைபெறுகின்றன. மறைக்கல்வி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நாடகங்களும் நடத்தப்படுகின்றன. தற்போது திருவிழாவின் கடைசி நாளில் ஆலயத்திலிருந்து ஆரம்பித்து ஆலங்கோடு வழியாக மிகப்பெரிய திருவிழாப் பவனி நடத்தப்பட்டு வருகிறது.

மேலும் 175 மாணவர்கள் வரை பயின்று வந்த நர்சரி வகுப்பு 1970 ல் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் சத்துணவு மையமாக அரசால் தரமுயர்த்தப்பட்டு அண்மைக்காலம் வரையிலும் செயல்பட்டு வந்தது.

புது ஆலயம் அர்ச்சிக்கப்பட்ட பின்னர் பழைய ஆலயத்தின் கோபுரத்தின் வடிவம் மாற்றியமைக்கப்பட்டு தற்போது கூட்டங்கள் நடத்தக்கூடிய அரங்கமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருமண நிகழ்வு கொண்டாட்டங்களை நடத்துவதற்காக இவை வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் இந்த ஆலய வளாகத்திலேயே குருவானவர் தங்கியிருக்கக் கூடிய இல்லம் அமைந்துள்ளது. முற்காலங்களில் பாய்ஸ் ஹோம் என்ற பெயரில்

www.malankaralibrary.com

பதினைந்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கி படித்து வந்தனர். மாலை நேரங்களில் மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக டியூஷன் வகுப்புகள் நடத்தப்பட்டு வந்தன.

## 24. மற்று ஆலயங்கள்

மேற்குறிப்பிட்ட ஆலயங்களைத் தவிர மேலும் பல ஆலயங்களும் ஆங்காங்கே அமைந்துள்ளன. அவற்றுள் சில, நாகராஜா ஆலயம் சாத்தன்கோடு, சீயோன் அப்போஸ்தலிக ஆலயம் சாத்தன்கோடு, இந்திய பெந்தக்கோஸ்து ஆலயம் நடைக்காவு, யெஹோவா ரூபா ஆலயம் இடவார் போன்ற மற்றும் பல ஆலயங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன.

நடைக்காவில் இந்து மதத்தினரும் கிறிஸ்தவ மதத்தினரும் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள். இஸ்லாம் மதத்தினரும் ஆங்காங்கே ஒருசிலர் காணப்படுகின்றார்கள். பொதுவாக அனைவரும் ஒற்றுமையாகவே வாழ்ந்து வருகின்றனர். குடும்ப நிகழ்வுகளில் மதச் சடங்குகள் வேறுபட்டவையாக இருப்பினும் மக்கள் எவ்வித வேறுபாடுமின்றி உறவொன்றிப்பில் நிலைத்திருக்கின்றனர்.

## 25. அருட்கன்னியர்கள்

முற்காலங்களில் கிராத்தூரில் தங்கியிருந்த அருட்சகோதரிகள் தான் சாத்தன்கோடு நடுநிலைப் பள்ளிக் கூடத்தின் தலைமை ஆசிரியர்களாக பணியாற்றி வந்தார்கள். இவர்களே முறையாக நடைக்காவு மற்றும் கோயிக்கத்தோப்பு போன்ற பகுதி வாழ் மக்களுக்கு பல்வேறுவிதமான ஆன்மீக உதவிகளை செய்து வந்தார்கள். அவர்களது சேவை இப்போதும் பலராலும் எடுத்துரைக்கப்படுகிறது.

ஆனால் ஏறக்குறைய 1999 ஆம் ஆண்டில் இத்தாலியை மையமாகக் கொண்ட அருள் சகோதரிகள்

www.malankaralibrary.com

நடைக்காவு கிறிஸ்து அரசர் ஆலயத்துக்கு அருகில் தங்கள் பணிகளை ஆரம்பித்தனர். சிறார்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியே இவர்களது முக்கிய நோக்கமாக இருந்தது. இதற்காக கணினி பயிற்சி நிலையம், பல்வேறு கருத்தரங்குகள், பல்வேறு கூட்டங்கள் ஒருங்கிணைத்து இளைஞர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தனர்.

இந்த அருட்கன்னியர்கள் இந்தியாவில் நடைக்காவில் தான் தங்களது முதல் கன்னியர் மடத்தை ஆரம்பித்தார்கள். இவர்களது அரிய சேவையாக இப்போது சிறுமியர்களுக்கான இல்லம் செயல்பட்டு வருகிறது. மேலும் சமூகத்தில் ஆதரவற்ற தாய்மார்களுக்கான அன்னையர் இல்லம் ஒன்றும் இவர்களால் வழிநடத்தப்படுகிறது. சோதனைகளில் வாடும் பல நபர்களையும் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் ஆன்மீக உதவிகள் புரிந்து இப்போதும் இவர்கள் நற்பணியாற்றி வருகிறார்கள். இந்த அருட்கன்னியர்களின் ஐந்துக்கும் மேற்பட்ட பல்வேறு மடங்கள் இந்தியாவின் பல பகுதிகளில் இடங்களில் உருவாக்கப்பட்டதாகும் நடைக்காவு தான் இந்தியாவிலேயே இவர்களின் தாய் இல்லமாக உள்ளது. எனவே தான் இவர்கள் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நடைக்காவு சிஸ்டேர்ஸ் என்றே அழைக்கப்பட்டு வருகிறார்கள். அருட்கன்னியர்களுக்கான பயிற்சி இல்லம் ஒன்றும் இவர்களுடைய கன்னியர் மடத்தில் செயல்பட்டு வருகிறது. இவர்களுடைய ஒரு இல்லம் கல்லூரி மாணவிகள் தங்கி படிக்கக் கூடிய விடுதியாகவும் செயல்பட்டு வருகிறது.

## 26. வளர்ப்பு மிருகங்கள்

வீடுகளில் செல்லப்பிராணிகளாக நாய், ஆடு மற்றும் மாடு போன்றவற்றை வளர்த்து வந்தனர். நாய்களை வீட்டிற்குள் அனுமதிப்பது இல்லை. வீட்டுக்கு காவல்காரனாக நாய்களை கருதி வீட்டிற்கு முன்

www.malankaralibrary.com

பகுதியிலேயே கட்டி வைத்திருந்தனர். பல வீடுகளிலும் ஆடுகள் வளர்க்கப்பட்டன. ஆட்டுப்பால் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது என்று பலரும் விரும்பி பருகுவர். ஆட்டு குட்டிகளை விற்பனை செய்து வந்தனர். ஆடு இல்லாத வீடுகளில் மாடுகள் காணப்படுகின்றன. வைக்கோல்களை மாடுகளுக்கு உணவாக கொடுத்து வந்தனர். மாட்டுச் சாணகம் விளைநிலத்திற்கு மிக முக்கியமான இயற்கை உரமாக பயன்படுத்தப்பட்டு வந்தது. மாடுகள் பால் வியாபாரத்திற்காக அதிகமாக பயன்படுத்தப்பட்டு வந்தது. மாட்டில் இருந்து கிடைக்கக்கூடிய பாலானது மக்கள் இயற்கையான பால் என்ற முறையில் விரும்பி வாங்கி பருகிக் கொண்டு இருந்தனர்.

அனைத்து வீடுகளிலும் கோழிகள் வளர்க்கப்பட்டன. கோழிகளுக்கு என்று தனிப்பட்ட முறையில் எந்த விதமான உணவுகளை வாங்கி வழங்குவதில்லை. அவை தானாகவே உண்டு வளர்ந்து வந்தன. மிக முக்கியமான விருந்துகள் நடைபெறக்கூடிய நேரத்திலும் கிறிஸ்துமஸ், உயிர்ப்பு போன்ற திருநாள்களிலும் வீட்டில் வளர்த்துகின்ற ஏதேனும் ஒரு கோழியை சமைத்து சாப்பிடுவர். கோழிகள் போடக்கூடிய முட்டைகளை சேமித்து வைத்து வீட்டுப் பயன்பாட்டிற்காக பயன்படுத்திய பின்னர் மீதமுள்ளவற்றை சந்தைகளில் விற்பனை செய்வர். புறா, முயல் மற்றும் சிட்டுக்குருவிகளையும் சிலர் வளர்த்து வருகின்றனர்.

நடைக்காவில் இரண்டு மிருக டாக்டர்கள் பணியாற்றி வருகின்றனர். ஏராளமான வளர்ப்பு மிருகங்கள் வீடுகளில் உள்ளதனால் நோய்கள் வருகின்ற போது இந்த மருத்துவர்களை மக்கள் உதவிக்கு அழைப்பார்கள். இவர்களும் ஓடோடிச் சென்று தேவைக்கு ஏற்ப சிகிச்சைகளை செய்து உதவுகிறார்கள். இந்த இரண்டு மருத்துவர்களின் அயராத சேவையை நாம் நிச்சயமாக பாராட்டியே ஆகவேண்டும்.

www.malankaralibrary.com

## 27. வணிக வளாகங்கள்

நடைக்காவு ரேஷன் கடையை தமிழக ஏழை மக்களுக்கு மிகவும் ஆறுதல் தரக்கூடிய ஒன்றாக இப்போதும் செயல்பட்டு வருகிறது. இவ்வூர் மக்கள் அதிக சிரமமின்றி ஊருக்குள்ளேயே இந்த ரேஷன் கடை பொருள்களை அரசின் சலுகைகளுக்கு ஏற்ப பெற்றுக் கொள்கின்றார்கள். அரசு வழங்கக்கூடிய சிறப்புச் சலுகைகளை இந்த ரேஷன் கடை வழியாகத்தான் மக்கள் பெற்றுக் கொள்கிறார்கள். பல நேரங்களிலும் இந்த ரேஷன் கடைக்கு முன்னதாக மிகவும் அதிகமான மக்கள் கூட்டம் கூடக்கூடிய ஒரு பகுதியாகவே காணப்படுகிறது.

நடைக்காவு சந்தை முற்காலத்தில் மிகவும் அழகாக மாலை நேரங்களில் மட்டுமே செயல்பட்டு வந்தது. குறிப்பாக இந்த சந்தைக்கு பல்வேறு பகுதிகள் அமைந்திருந்தன. தெற்குப் பகுதியில் தேங்காய் வியாபாரம், ஈர்க்கில் வியாபாரம், புன்னக்காய் மற்றும் முந்திரி பருப்பு வியாபாரங்கள் நடைபெற்றன. அதற்கு மேற்குப் பகுதியில் இரும்பினால் வீட்டு உபயோக கருவிகள் செய்யக்கூடிய கடை அமைந்திருந்தது. அதாவது அந்த கடையில் இரும்பை மிகவும் கூடிய வெப்பத்தின் வழியாக காய்க்க செய்வர். இவ்வாறு காய்க்கச் செய்த இரும்புத் துண்டானது பார்ப்பதற்கு சிவப்பு நிற மாணிக்கல் போன்று பார்ப்பதற்கே அழகாக தென்படும். இந்த இரும்பை பின்னர் சரியாக வெட்டி வடிவமைத்து மண்வெட்டி, கோடாரி, கத்தி மற்றும் வெட்டுக் கத்தி போன்ற மிக முக்கியமான வீட்டு உபயோகப் பொருட்களை செய்வர். சிறுவர்கள் பழங்காலங்களில் இந்த கடைக்கு முன்னதாக நின்று அவர்கள் செய்யக்கூடிய அந்த பணிகளை வியப்போடு பார்த்து மகிழ்வார்கள்.

இதற்கு பக்கத்திலேயே ஒரு சில கடைகள் ஓலைக் குடிசைகளாகவே அமைக்கப்பட்டிருந்தன. அந்த கடைகளில் உப்பு வியாபாரம் நடைபெற்று வந்தது. இங்கே

www.malankaralibrary.com

விற்பனை செய்யப்பட்ட உப்பு என்பது நேரடியாக உப்பளங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு விற்கப்பட்டு வந்தது. போணி எனப்படும் இரும்பினால் செய்யப்பட்ட அளவை அல்லது முளையிலிருந்து உருவாக்கப்பட்ட அளவையின் மூலம் அளந்து விற்கப்பட்டது. இவ்வாறு கலப்படம் இல்லாத நல்ல உப்பு வியாபாரம் நடைக்காவு சந்தையில் நடைபெற்று வந்தது. இந்த உப்பை மக்கள் அனைவரும் அதிகமாக சமையலுக்காகவே இங்கிருந்து வாங்கிச் செல்வர்.

தேங்காய் வியாபாரம் செய்யக்கூடிய பகுதிக்கு முன்புறமாக வெற்றிலை பாக்கு போன்றவை விற்பனை செய்யக்கூடிய பகுதி ஆகும். நடைக்காவு பகுதியிலேயே பயிரிடப்பட்ட வெற்றிலைக் கொடிகள் தான் இங்கே அதிகமாக விற்பனை செய்யப்பட்டு வந்தன.

அடுத்த வரிசை காய்கறிக்கடைகள் ஆகும். இப்பகுதியில் நடைக்காவு பகுதியில் பயிர் செய்யக்கூடிய காய்கறிகள் மற்றும் சிவப்புக் கீரைகள் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டன. இவை அனைத்தும் இராசாயன உரங்கள் சேர்க்கப்படாமல் இயற்கை உரங்களையே பயன்படுத்தி விளைவிக்கப்பட்டவை ஆகும். நடைக்காவு மக்கள் அன்றும் இன்றும் மரக்கறிகள் அடங்கிய உணவையே அதிகமாக விரும்பி உண்கின்றனர்.

சந்தையின் வடக்குப் பகுதியில் முழுவதுமாக மீன் சந்தை செயல்பட்டு வந்தது. இரயுமன்துறை, தூத்தூர், வள்ளவிளை போன்ற பகுதிகளிலிருந்து வியாபாரிகள் நடைக்காவில் மீன்களை விற்பனை செய்து வந்தனர். முற்காலங்களில் இந்த மீன்களை தலையில் சுமந்து வந்து இங்கே விற்பனை செய்து வந்தனர். மாலை வேளையில் கடைசி மீன்கள் வரை விற்று தீர்க்கக்கூடிய வரை அனைவரும் ஒன்றாக அமர்ந்து இருப்பார்கள். ஏறக்குறைய ஐந்து பேர்கள் பத்துபேர்கள் சேர்ந்த குழுவாக விற்பனை முடித்த பின்னர் தங்கள் காலிக் குட்டைகளில்

www.malankaralibrary.com

அவர்களுக்கு தேவையான பலசரக்கு சாதனங்களையும் வாங்கிக் கொண்டு நடந்தே தங்கள் கடற்கரை கிராமங்களை நோக்கிச் செல்வார்கள். இவ்வாறு நடந்து செல்லக்கூடிய நேரத்தில் அவர்கள் ஜெபித்துக் கொண்டும், பாடல்களைப் பாடிக் கொண்டும் செல்வார்கள். இவர்கள் பாடக்கூடிய பாடல்கள் கேட்பதற்கு மிகவும் அருமையாக அமைந்திருக்கும். பிற்காலங்களில் அரசுப் பேருந்துகள் மற்றும் தற்போது தனியார் வாகனங்களையும் இவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

சந்தைக்கு நுழைவுவாயிலில் குழந்தைகளுக்கு பிடித்தமான இனிப்புப் பண்டங்களும் விளையாட்டுப் பொருட்களும் சிறுசிறு அத்தியாவசியப் பொருட்களும் விற்கப்படுகின்றன. மேலும் காரைக்காய், நெல்லிக்காய், சீமை நெல்லிக்காய், இலந்தைப்பழம், பலாப்பழம், பல வகை மாம்பழங்கள், பல வகை வாழைப்பழங்கள், அயனிப்பழம், முந்திரிப்பழம், வேகவைத்த பனம்பழம், பனங்கிழங்கு, காய்ச்சில் கிழங்கு, சிறுகிழங்கு மற்றும் சாம்பக்காய் போன்ற ஊரிலேயே விளையக்கூடிய பல விளைபொருட்கள் இச்சந்தையில் விற்பனைக்கு வருகின்றன. மளிகை மற்றும் பலசரக்கு கடைகளும் சந்தையின் நுழைவு வாயிலுக்கு அருகாமையில் விற்கப்பட்டன.

## 28. சேமிப்பு கலன்கள்

உணவுப் பொருள்கள் மற்றும் தானியங்களை சேகரித்து வைப்பதற்காக பல்வேறு கலன்களை சேமிப்பு கிடங்குகளாக பயன்படுத்தி வந்தார்கள். அவற்றுள் முக்கியமான ஒன்று தான் பத்தாயம். பத்தாயம் என்பது தடியினால் செய்யப்பட்டு நமது அறைக்கு உள்ளே வைக்கக்கூடிய அமைப்பை கொண்டதாகும். ஒரு சிலர் இதனை படுக்கையாகவும் பயன்படுத்துவர். நெல் மற்றும் உலர்த்தப்பட்ட மரவள்ளிக் கிழங்கு போன்றவற்றை ஆண்டுதோறும் இவற்றுள் சேகரித்து வந்தார்கள்.

www.malankaralibrary.com

ஒரு வீட்டில் பத்தாயம் உண்டு என்றால் அவன் செல்வனாக வாழ்ந்து வந்தான் என பொருள் கொள்ளப்பட்டது. பத்தாயம் செய்வதற்கு முடியாத பட்சத்தில் மிகப்பெரிய பானைகளுக்குள் தானியங்களை சேகரித்து வந்தார்கள். மேலும் பனை ஓலையால் செய்யப்பட்ட கடவம் எனப்படும் பெட்டியையும் அதன் மேல் பகுதியில் வைக்கோலால் மூடி தானியங்களை சேமிப்பதற்கு பயன்படுத்தி வந்தார்கள்.

மாங்காய் மற்றும் வாழைக்காய்களை பழுக்க வைப்பதற்காக அவற்றை வைக்கோலால் மூடி பெட்டிகளுக்குள் போட்டு வைத்திருந்தார்கள். வைக்கோலை சுற்றி கட்டுகின்ற போது அதிலிருந்து இயல்பாக உருவாகக்கூடிய வெப்பத்தின் காரணமாக இத்தகைய காய்கள் கனிகளாக மாறின.

புளிகளை பானைகளில் சேமித்து வைத்திருந்தனர்.

## 29. துணிக் கடைகள்

முற்காலத்தில் நடைக்காவுக்கு மிகவும் பெருமை சேர்க்கக் கூடிய மூன்று துணிக்கடைகள் அமைந்திருந்தன. அவை திரு அப்பியான் கடை, செட்டியாரின் கடை, திரு கண்ணாடி ஜான்சன் என்பவையே. இந்த துணிக்கடைகளிலிருந்து மக்கள் விரும்பி துணிகளை வாங்கி தையல்காரர்களிடம் கொடுத்து அதனை தைத்து ஒவ்வொருவருடைய தேவைக்கு ஏற்ப பயன்படுத்தி வந்தார்கள். கிறிஸ்துமஸ், ஓணம், உயிர்ப்பு, தீபாவளி போன்ற நாட்களில் மக்கள் அதிகமாக இந்த கடைகளிலிருந்து புதிய துணிகளை வாங்கினர். திருமண நிகழ்வுகளுக்காகவும் தேவைப்பட்ட துணிகளை இந்த கடைகளிலிருந்தே பக்கத்து ஊர் மக்களும் வாங்கினர். அவ்வாறே பல தையலகங்களில் ஏராளமான தையல்கார்களும் நடைக்காவில் செயலாற்றினர்.

www.malankaralibrary.com

தற்போது இந்த மூன்று கடைகளுமே மாயமாகி விட்டன. அதற்கு பதிலாக டெக்ஸ்டைல்ஸ் என்ற பெயரில் முன்கூட்டியே தயாரித்து வைத்திருக்கக்கூடிய ரெடிமேடு ஆடைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. தற்போதைய கலாச்சாரத்தின் படி டெக்ஸ்டைல்ஸ் போன்ற கடைகளை மக்கள் மிகவும் விரும்பி பயன்படுத்தி வருகிறார்கள்.

## 30. ஹோட்டல்

நடைக்காவு பகுதியில் மிகமுக்கியமாக என் சி ஹோட்டல் முருகா ஹோட்டல் போன்றவை மிகவும் பழமையான ஹோட்டல்கள் ஆகும். இந்த ஹோட்டல்களில் காலை மாலை மதிய நேரங்களில் உணவுகள் வாங்குவதற்காகவே ஏராளமான மக்கள் விரும்பி சென்றனர். முற்காலங்களில் எந்தவிதமான கலப்படமும் இல்லாமல் நல்ல சுவையான உணவு பொருட்கள் இந்த ஹோட்டல்களில் இருந்து நம்மால் வாங்கி பயன்படுத்த முடிந்தது. இந்த ஹோட்டல்களில் புட்டு, தோசை, இடியப்பம் போன்ற காலை உணவு பொருட்களும், மதிய நேரத்தில் சாப்பாடும், மாலை நேரங்களில் பரோட்டா , சப்பாத்தி போன்ற உணவுப்பொருட்களும் தயார் செய்யப்பட்டு விற்கப்பட்டு வந்தன. இங்கே தயாரிக்கப்படும் பருப்பு வடை, உழுந்து வடை, உண்ணியப்பம், உள்ளி வடை மற்றும் மோதகம் போன்ற தின்பண்டங்கள் மிகவும் சுவை மிகுந்தவைகளாக இருந்தன.

இந்த ஹோட்டல்களை தவிர வேறு பல தேனீர் கடைகள் அமைந்திருந்தன. அதிகாலையிலேயே வியாபாரத்திற்காக களியக்காவிளை சந்தைக்கு செல்லக்கூடிய நபர்கள் காலை நான்கு மணிக்கே முதல் பேருந்தில் பயணம் செல்வதற்காக பல ஊர் மக்களும் இந்த சந்திப்பை வந்தடைகின்றனர். இவர்கள் முதலாவதாக இந்க கடைகளிலிருந்தே தேநீர் அருந்தி

www.malankaralibrary.com

பின்னர் சுறுசுறுப்போடு தொடர்ந்து பயணத்தை மேற்கொள்கிறார்கள். குறிப்பாக செல்வமணி என்பவருடைய கடையில் முற்காலங்களில் டபுள்சாயை விற்கப்பட்டது. டபுள் சாயை என்றால் இரண்டு மடங்கு கொள்ளளவு கொண்ட கண்ணாடிக் குவளையில் டீ வழங்கப்படுகிறது. இந்த கடைகளில் மக்கள் அமர்ந்து வானொலிச் செய்திகளைக் கேட்பதும், செய்தித்தாள்களை வாசிப்பதும், ஊர்க் காரியங்களைப் பற்றி பேசுவதும் வழக்கமாக அமைந்திருந்தது.

## 31. சினிமா தியேட்டர்

நடைக்காவு சாத்தன்கோடு சந்திப்பிலிருந்து வாவறை செல்லும் வழியில் சினிமா தியேட்டர் ஒன்று செயல்பட்டு வந்தது. பள்ளிக்கூடங்களில் இருந்து இந்த சினிமா தியேட்டரில் சினிமா காண்பதற்காக அழைத்துச் சென்றிருக்கிறார்கள். இந்த ஊர் மக்களுக்கும் சுற்றியுள்ள ஊர் மக்களுக்கும் திரைப்படம் பார்க்க விரும்புவோருக்கும் முக்கியமான ஒன்றாக அமைந்திருந்தது. ஆனால் இந்த தியேட்டரின் அமைவிடம் அன்றைய காலத்தில் சற்று ஒதுங்கிய மறைவான பகுதியாக அமைந்திருந்ததால் அதிகமான மக்கள் பயத்தின் காரணமாக செல்ல விரும்பவில்லை. இவ்வாறு குறைந்த பார்வையாளர்களின் காரணமாக பின்னர் அது மூடப்பட்டது.

## 32. அரசியல் கட்சிகள்

நடைக்காவை மையமாகக்கொண்டு அனைத்து தேசியக் கட்சிகளும் மாநிலக் கட்சிகளும் தங்களுடைய கட்சி அலுவலகங்களை கொண்டு மிகவும் ஆர்வத்தோடு செயல்பட்டு வருகின்றனர். குறிப்பாக அரசியல் தலைவர்கள் இப்பகுதிகளுக்கு வரக்கூடிய நேரங்களிலும் தேர்தல் நேரங்களிலும் இவர்களுடைய சுறுசுறுப்பான செயல்பாடுகளை நம்மால் காணமுடிகின்றது. தேவைக்கேற்ப அடிக்கடி விழிப்புணர்வு மற்றும்

www.malankaralibrary.com

போராட்டங்களை மையப்படுத்திய கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. நடைக்காவைச் சார்ந்த பலரும் இத்தகைய கட்சிகளில் மிகப்பெரிய பொறுப்பை வகித்து இருக்கிறார்கள் என்பதும் பல நேரங்களிலும் எம்எல்ஏ மற்றும் எம்பி பதவிகளுக்காக போட்டியிட்டு தேர்தலை சந்தித்து இருக்கிறார்கள் என்பதும் பெருமைக்குரிய ஒன்றாகும்.

பொதுவாக அரசியல் கட்சிகள் தங்களின் உயர் பொறுப்புகளை நகர் வாழ் மக்களுக்கே வழங்க விரும்புவார்கள். ஆனால் நம்மூரைச் சார்ந்த திரு தர்மராஜ் அவர்கள் பாரதிய ஜனதா கட்சியின் குமரி மாவட்டத் தலைவராகவும், திரு. ஐடன் சோணி அவர்கள் தேசிய முற்போக்கு திராவிட கழக கட்சியின் குமரி மேற்கு மாவட்டச் செயலாளராகவும் பொறுப்பேற்று அரசியல் பணி செய்து வருகின்றனர். மேலும் நடைக்காவு ஊராட்சியின் அண்டை பேரூராட்சி எழுதேசம் பேரூராட்சியை சார்ந்த திரு. செல்லசாமி அவர்கள் மார்க்சிஸ்டு கம்யுனிஸ்ட் கட்சியின் குமரி மாவட்டச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டு பணியாற்றி கொண்டிருக்கிறார். இம்மூவரும் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை தவற விட்டவர்கள். இவர்களின் அரசியல் வாழ்வு நம்மூருக்கு பெருமை சேர்ப்பதாக உள்ளது. இவர்களைப் போன்றே மேலும் பல நபர்கள் பொறுப்புக்களோடு அரசியல் வாழ்வில் ஈடுபட்டுள்ளனர்.

## 33. டாக்சி கார்கள்

அம்பாசிடர் கார்களை மட்டுமே டாக்சி கார்களாக நடைக்காவில் பயன்படுத்தி வந்தனர். ஏறக்குறைய 20 க்கும் மேற்பட்ட அம்பாசடர் கார்கள் சாலையோரங்களில் வரிசையாக அணிவகுத்து நிற்பதே கண்களுக்கு அருமையான அரிய காட்சியாக அமைந்திருந்தது. பின்னர் இந்த நிலையானது மாற்றப்பட்டு அம்பாசிடர் கார்களுக்கு

www.malankaralibrary.com

பதிலாக மற்று பல விதமான கார்களை பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். ஆனால் தற்போது வாடகைக்காக ஏராளமான ஆட்டோக்கள் நடைக்காவில் துவங்கப்பட்டுள்ளன. சிறு தூர பயணத்திற்காக மக்கள் அனைவரும் இந்த ஆட்டோக்களை பயன்படுத்தி வருகிறார்கள். மேலும் திருமண வைபவங்களுக்கு செல்வதற்காக கார்களையும் மக்கள் வாடகைக்காக பயன்படுத்துகிறார்கள். மேலும் திருப்பயணம் செல்வோரும் சுற்றுலா செல்வோரும் திருமண நிகழ்வுகளுக்காகவும் வேன்களில் வாடகைப்பயணம் மேற்கொண்டனர்.

## 34. மது விற்பனை

முற்காலங்களில் பனைகளில் இருந்து தயாரிக்கப்பட்ட கள் விற்கப்பட்டு வந்தது. பின்னர் இந்த கள்ளிற்கு பதிலாக சாராயம் விற்பனைக்கு வந்தது. இவை அதிகாரப்பூர்வமான விற்பனைக்கு அனுமதிக்கப்படவில்லை. அரசுக்கு பயந்து குடி பிரியர்களும் மறைந்திருந்தவாறு வாங்கி குடித்து மகிழ்ந்து வந்தார்கள். ஆனால் தற்போது அரசின் அனுமதியோடு டாஸ்மாக் கடை செயல்பட்டு வருகிறது. பக்கத்து ஊர்களில் இருந்து ஏராளமான நபர்கள் தினந்தோறும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி வந்து குடித்து மகிழ்கிறார்கள். பல நேரங்களிலும் நடைக்காவு சந்திப்பில் இந்த டாஸ்மாக் கடையில் இருந்து சாராயத்தை வாங்குவதற்காக மக்கள் நெருக்கமாக இருக்கின்றபோது போக்குவரத்திற்கு இடையூறாக அமைந்தது. மேலும் இந்த மது வாங்க வரக்கூடிய நபர்களின் அதிவேகமான பயணத்தின் மூலம் பல்வேறு விதமான விபத்துக்கள் அடிக்கடி நடைக்காவு பகுதியில் ஏற்படுகின்றன.

முற்காலங்களில் கேரளாவிற்கு தமிழகத்தில் இருந்து சாராயம் கடத்தக் கூடிய மிக முக்கிய பாதையாக

www.malankaralibrary.com

நடைக்காவு பயன்படுத்தப்பட்டு அம்பாசிடர் கார்களில் கடத்தி வந்தார்கள். காவலர்கள் இந்த காருக்கு பின்னால் அவர்களை துரத்துவதும் பல இடங்களில் அள்ளு என்ற கருவியை பயன்படுத்தி இந்த சாராய வாகனங்களை பிடிப்பதும், டயர் பஞ்சர் ஆன பின்னரும் அதை ஒட்டி மீண்டும் கேரள எல்லையை அடைந்து தப்பி விடுவதும் வினோதமாக அமைந்திருந்தது.

## 35. மணல் கொள்முதல்

நடைக்காவு ஆற்று மணலுக்கு மிக முக்கியமான சந்தை பகுதியாக இருந்தது. பல்வேறு லாரிகளில் இந்த ஆற்று மணலை கொண்டு வந்து குவிப்பார்கள். பின்னர் கடல் மணலையும் குவித்து இரண்டையும் ஒன்றாக இணைத்து கேரளாவிற்கு விற்பனை செய்து வந்தார்கள். கேரளாவுக்கு மணல் விற்பனை செய்தல் அனுமதி நிறுத்திய பின்னர் இத்தொழிலானது முற்றிலும் அழிந்துவிட்டது.

மேலும் தற்போது கட்டிடத் தொழிலுக்கு தேவையான மணலோடு சேர்த்து சிமெண்ட் கட்டைகளை தயாரிக்கும் பல்வேறு தொழிலகங்கள் நடைக்காவு பகுதிகளில் செயல்படுகின்றன. இந்த தொழிலகங்களில் ஏராளமானவர்கள் பணிபுரிகிறார்கள்.

## 36. விளையாட்டுக்கள்

கபடி விளையாட்டு இளைஞர்களுக்கான விளையாட்டு ஆகும். இரண்டு குழுவாக நின்று மாறி மாறி கபடி விளையாடி தங்களுடைய வீரத்தை இளைஞர்கள் காட்டிக்கொண்டனர். கிரிக்கெட், கைப்பந்து, பூப்பந்து போன்ற விளையாட்டுக்களும் இளைஞர்கள் குழுக்களாக நின்று விளையாடுகின்றனர்.

சவன்றி விளையாட்டு, எறிபந்து விளையாட்டு, தொட்டு விளையாட்டு, கள்ளன் போலீஸ் விளையாட்டு.

www.malankaralibrary.com

பாண்டி விளையாட்டு. கோலி விளையாட்டு. ஈர்க்கில் விளையாட்டு. குளம் கரை விளையாட்டு, தலை தொட்டு விளையாட்டு. மறைந்திருப்போரை கண்டு பிடிக்கும் விளையாட்டு போன்ற விளையாட்டுகள் வீடுகளில் விளையாடுகின்றனர்.

பள்ளிக்கூடங்களில் கோகோ விளையாட்டு விளையாட ஊக்குவிக்கப்படுகின்றார்கள். மாணவர்களுக்கு பள்ளிக்கூடங்களில் ஓட்டம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல் மற்றும் ஈட்டி எறிதல் போன்ற விளையாட்டுகளுக்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

## 37. வெளிநாடுகளில்

நடைக்காவிலிருந்து ஏராளமான நபர்கள் வெளிநாடுகளில் பணி நிமித்தமாக வாழ்ந்து வருகிறார்கள். ஒரு சிலர் தனியாகவும் ஒரு சிலர் குடும்பமாகவும் வெளிநாடுகளில் வாழ்ந்து நம்மூருக்கு பெருமை சேர்த்து வருகிறார்கள். இவற்றுள் அதிகமானோர் துபாய், சவுதி அரேபியா போன்ற அரபு நாடுகளிலும் சிங்கப்பூர் மலேசியா அமெரிக்கா ஆஸ்திரேலியா ஜெர்மனி போன்ற நாடுகளிலும் வாழ்ந்து பணிபுரிகின்றனர். இவர்கள் அனைவரும் விடுமுறைக்கு தவறாது வந்து நம்மூர்க் கலாச்சாரத்தையும் நம்மூரின் வாழ்வுமுறைகளையும் ஆர்வத்தோடு அனுபவித்து வருகிறார்கள்.

இவ்வாறு சென்னை போன்ற வெளியூர்களிலும் நம்மூரைச் சார்ந்தவர்கள் வாழ்ந்து பணிபுரிந்து வருகிறார்கள். குறிப்பாக பல்வேறு துறைகளில் பல்வேறு விதங்களில் பயிற்சி பெற்ற பல சாதனையாளர்கள் நம் ஊரைச் சார்ந்தவர்கள் வெளிநாடுகளிலும் வெளியூர்களிலும் பல்வேறு நிறுவனங்களில் பணிபுரிந்து நம்மூருக்கு சிறப்பு சேர்த்து வருகின்றனர்.

www.malankaralibrary.com

## 38. தண்டனைகள்

வீடுகளிலும் பள்ளிக்கூடங்களிலும் செய்யும் மாணவர்களின் தவற்றுக்கும் தவறான நடத்தைகளுக்காகவும் பலவிதங்களில் தண்டனைகள் பொதுவாக வழங்கப்பட்டிருந்தன. பள்ளிக்கூடங்களில் மிக முக்கியமான தண்டனை என்பது பிரம்பு எனப்படும் கம்பினால் உள்ளங்கை அல்லது பின் தொடைப்பகுதியில் அடி வாங்குதல் தான் மிக முக்கியமான தண்டனையாக இருந்து வந்தது. நீண்ட நேரம் பள்ளிக்கூட வகுப்பறையில் இருந்து வெளியேற்றப்படுதல், பலமணிநேரம் வெயிலில் நிற்க வைத்தல், முழங்காலில் நிற்க வைத்தல், குனிந்து நிற்க வைத்தல், மேலும் பலமுறை இரு கைகளையும் தங்கள் செவிகளில் பிடித்தவாறு அமர்ந்து எழச் செய்தல்.

மேலும் பள்ளிக்கூட மாணவர்கள் சரிவர தங்கள் வீட்டுப் பயிற்சிகளை செய்யாமல் இருக்கின்றபோது இம்போசிஷன் எழுதக்கூடிய தண்டனையும் செயல்படுத்தப்பட்டு வந்தது. அதாவது தவறாக எழுதக்கூடிய விடையின் சரியான விடையை கண்டுபிடித்து அதனை நூறுமுறை அல்லது இருநூறு முறை அதை எழுதி வரச் செய்தல். மேலும் மாணவர்கள் வகுப்புக்கு ஒழுங்காக வராமல் இருக்கின்ற போதும் தவறுகள் செய்கின்ற போதும் பெற்றோர்களை பள்ளிக்கூடங்களில் வரவழைத்து எச்சரிக்கை செய்து செலுத்தி அனுப்பி வந்தனர். குறிப்பாக வரக்கூடிய பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளின் நலன் கருதி ஆசிரியர்களிடம் நீங்கள் என்ன தண்டனை வேண்டும் என்றாலும் கொடுங்கள் எனது பிள்ளை நன்றாக படிக்க வேண்டும் என்ற கொள்கையை பலரும் கொண்டிருந்தனர்.

இவை தவிர வீடுகளிலும் மாணவர்கள் பிள்ளைகளின் தவறான நடத்தை குறிப்பாக திருடுதல், பொய் சொல்லுதல், ஏளனம் செய்தல் மற்றும் தவறான வார்த்தைகள் பயன்படுத்துதல் போன்ற குற்றங்களுக்காக

www.malankaralibrary.com

பல்வேறு தண்டனைகளை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். நுள்ளுதல் அல்லது கிள்ளுதல் எனப்படுவது இரண்டு விரலாலும் நபர்களுடைய தோலைப்பிடித்து கிள்ளியவாறு கடின வலி தரக்கூடிய தண்டனையை அமைந்திருந்தது. மேலும் கைகளால் அடிக்கக்கூடிய தண்டனையும் வீடுகளில் அமைந்திருந்தது. இன்னொரு முக்கியமான தண்டனை என்பது ஏதேனும் தவறு செய்கின்ற போது நல்ல சுவையான உணவு இருந்த போதும் பட்டினி கிடக்க வைத்தல். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பதன் படி கையில் கிடைக்கும் எதனையும் பயன்படுத்தி அடிக்கும் தண்டனை கொடுத்து வந்தனர். இவ்வாறு துடைப்பத்தால் அடிவாங்குதலும் செருப்பால் அடி வாங்குதலும் மிகவும் இழிச்செயலாகவும் இழிவான தண்டனையாகவும் அமைந்திருந்தது.

மேலும் மிக முக்கியமான ஒரு தண்டனை என்பது மீற்றான் கூட்டை குடைதல். மீறு என்பது ஒருவித செம்மண் நிறத்திலான எறும்பு ஆகும். இந்த எறும்பு விஷம் உடையது அல்ல. ஆனால் அது கடிக்கின்ற போது அது மிகுந்த வலியை ஏற்படுத்துகின்றது. மிகப்பெரும் தவறு செய்யக்கூடிய நபரை மரத்தில் கட்டிவைத்து மரத்திலிருந்து மீறுகளின் வாழக்கூடிய கூட்டை அப்படியே அந்த நபரின் மேல் சிதறச் செய்து அவை கடித்து வலியை ஏற்படுத்தும் தண்டனை கொடுத்து வந்தனர்.

## 39. கட்டிட அமைப்பு

முற்காலங்களில் வீடுகள் அதிகமாகவும் ஓலை வீடுகளாக இருந்தன. தென்னை ஓலைகளை முடைதல் வீட்டில் உள்ள அனைத்து நபர்களுக்கும் உரிய பணியாகும். குறிப்பாக பெண்கள் பல நாட்களுக்கு முன்னே தென்னை ஓலைகளை வாங்கி தங்களுடைய வீட்டு முற்றத்தில் வைத்து ஓலைகளை முடைந்து தயாரிப்பர். கூரைகளின் மீது தேவையான தடிகளை வைத்து கட்டி அதன் மேல்

www.malankaralibrary.com

முடைந்த ஓலைகளை விரித்து இறுக்கமாக கட்டி வைப்பர். இத்தகைய ஓலைக்கூரைகளில் மழைக்காலங்களில் மழைநீர் இடுக்குகள் வழியாக உள்ளே நுழைவதற்கான வாய்ப்புகள் ஏராளம். ஆனால் கோடைக் காலங்களில் இத்தகைய ஓலை வீடுகளுக்குள் அமர்ந்திருப்பது என்பது தற்போது குளிரூட்டும் செய்யப்பட்ட அறைக்குள் அமரும் விதத்திலான ஒரு நிலையை நம்மால் உணர முடியும்.

சற்று வசதி படைத்த நபர்கள் ஓலை வீடுகளுக்கு பதிலாக ஓட்டு வீடுகளை கட்ட ஆரம்பித்தனர். ஓட்டு வீடுகளும் தட்பவெப்ப கால சூழ்நிலைக்கு ஏற்றவாறு குளிர்ச்சியைத் தருமாறு அமைந்திருக்கும். பிற்காலங்களில் இந்நிலை முற்றிலுமாக மாற்றப்பட்டு ரெடிமேடாக சந்தைகளில் வாங்க கிடைக்கும் ஆஸ்பெஸ்டாஸ் எனப்படும் செயற்கையான விரிப்புகளை மேற்கூரைக்காக பயன்படுத்த ஆரம்பித்தனர். விலை குறைவாக கிடைப்பதாலும் எளிதில் வேலையை முடிக்க உதவுவதாகவும் இத்தகைய கூரைகளையும் மக்கள் ஆர்வத்தோடு ஓலைக்குடிசைகளில் மாற்றி பயன்படுத்த ஆரம்பித்தனர்.

ஆனால் தற்போது இத்தகைய வீடுகள் அனைத்தும் மாற்றப்பட்டு அதிகமாகவும் கான்கிரீட் செய்யப்பட்ட வீடுகளே அதிகமாக காணப்படுகின்றன. இருப்பினும் ஓலைக் குடிசை வீடுகள் மிகவும் மிகவும் மிகவும் குறைவான எண்ணிக்கையில் மட்டுமே உள்ளன. ஓட்டு வீடுகள் பழைய வீடுகளாக ஆங்காங்கு காணப்படுகின்றன. ஆஸ்பெஸ்டாஸ் போட்ட வீடுகளும் ஆங்காங்கு காணப்படுகின்றன. காங்கிரீட் வீடுகள் தான் தற்போது அதிகமாக இவ்வூரில் உள்ளன.

## துணை நின்றவை

1. https://www.census2011.co.in/data/town/643113-nadaikavu-tamil-nadu.html
2. http://wikiedit.org/India/Nadaikavu/227679/

www.malankaralibrary.com

3. https://indiabyroad.in/nadaikavu-munchira
4. https://ta.wikipedia.org/wiki/%E0%AE%A8%E0%AE%9F%E0%AF
5. Details collected by Interviews: Audlin Beena, Nixon Azariah, Theodor E John, George
6. Magazine from 100 Year celebration of CSI Church Nadaikkavu
7. Magazine from Malankara Catholic Church Nadaikkave
8. Photos by Sam Sajin மற்றும் பல படங்களும் முகநூல் குழுமத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளன

„எங்கும் பசுஞ்சோலையாய்

பட்டணிந்த மங்கையாய்

இளமையாய்

அழகினளாய்

முல்லையும் மருதமும் கொண்டு

பழமையை அணிந்திருக்கும்

எம்மூர் நடைக்காவே!

நீர் வாழிய வாழியவே“